Registered as a Newspaper பக்கங்கள் 12 விலை ரூபா 6.00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 19 (01.4.94) வெள்ளிக்கிழமை ஒசை 42

## வாரம் ஒருமுறை தபால் எடுத்துவர முயற்சி

யாழ் குடாநாட்டுக்கான வெளியூர்த்தபால்பொதிகளை வாரம் ஒரு தடவை எடுத்து வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரினால் நடாத்தப் பட்டு வரும் வாராந்த நோயாளருக்கான கப்பல் சேவை மூலம் தபால் பொதிகளை எடுத்துவருவது குறித்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஆராய்ந்து (12ம்பக்கம்பார்க்க)

# நோர்வே இராஜதந்திரியின் யாழ். விஜயம் ஒத்திவைப்பு

## வெளிநாட்டு மத்தியஸ்தத்தை சிறிலங்கா விரும்பாதது காரணம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்கும் முன் முயற்சியாக யாழ்ப்பாணத்திற்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருந்த நோர்வே இராஜதந்திரி தனது பயணத்தை ஒத்திவைத்துள்ளதாக நம்பகரமாகத்தெரிய வருகின்றது சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினை விடயத்தில் வெளிநாடுகளின் மத்தியஸ்தத்தை விரும்பாமையே இவரது பயணம் ஒத்திவைக்கப்பட்டமைக்குக் காரணம் எனவும் அறிய வருகின்றது.

இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியான தீர்வொன்றைக் காணும்பொருட்டு பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள நோர்வே அரசு முன்முயற்சி ... நிலவற்றை மேற்கொண்டிருந்தது. இதன் ஒரு அங்கமாக தமது இராஜதந்திரி ஒருவரையும் நியமித்திருந்தது தெரிந்ததே.

இவ் இராஜ தந்திரியான திரு. ஆர்னே பிகோர்ப் ரோபட் என்பவரின் வடபகுதி விஜயமே தற்பொழுது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இனப்பிரச்சினை விடயத்தில் வெளிநாடுகளின் தலையீடு ஏற்படுவதை சிறிலங்கா அரசு எதிர்த்து வருவதேதிரு. ஆர்னேயின் பயணம் ஒத்திவைக்கப்பட்டதற்குக் காரணம் எனத் தெரிய வருகின்றது.

## ...பொலிஸ் அதிகாரிகள் மீது தலைமைப்பீடம் விசாரணை

### - தேர்தல் முறைகேட்டில் ஈடுபட்டனராம்

(கொழும்பு)

தென் மாகாண சபை தேர்தலின் போதும், தேர்தலின் பின்னரும் ஒருதலைப் பட்சமாக நடந்து கொண்டதாக குற்றம் சாட்டப்பட்ட இருபது பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக பொலிஸ் தலைமைக் காரியாலயம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெறும் போது ஏற்பட்ட வன்முறை சம்பவங்கள் மற்றும் மோசடிகள் தொடர்பாக இவர்கள் முறைகேற்றவிதத்தில் நடந்து கொண்டதாக மேற்படி (12ஆம் பக்கம் பார்க்க)

## தென்மாகாண முதல்வராக தொடங்கொட பதவியேற்பு

(கொழும்பு)

தென்மாகாண சபை முதல் ...சராக பொது ஜன ...முன்னணி உறுப்பினர் ...றி தொடங்கொட ...மாகாண சபை ஆளுநர் ...லையில் நேற்று காலை ...ப் பிரமாணம் செய்து ...டார்.

காலியில் ஆளுநரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் இப் பதவிப் பிரமாணம் நடைபெற்றபோது பெருந்தொகையான மக்களும் அதில் கலந்து கொண்டனர்.

தென்மாகாண சபை நால்வரைக் கொண்ட அமைச் (12ஆம் பக்கம் பார்க்க)

### ...சிய விவகாரங்களுக்கான

## ...மெரிக்க அமைச்சர் ...ழும்பு வந்துள்ளார்

(கொழும்பு)

...சிய விவகாரங்க... பொறுப்பான அமெரி...த்தி வெளிநாட்டமைச் ...திருமதி றொபின் டென் ...பல் கொழும்பு வந்துள்...ர். இவர் இங்கு ஐந்து ...ள் தங்கியிருப்பார்.

...நாட்களில் ஜனாதிபதி, ...மந்திரி, பதில் வெளிவிவகார அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து உரையாட உள்ளார்.

அமெரிக்க வெளிநாட்டமைச்சில் தெற்காசிய விவகாரங்களுக்கென புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் பணியகத்திற்கு பொறுப்பாக இரு (12ஆம் பக்கம் பார்க்க)

## இன்று மூடப்பட்டிருக்கும்

இன்று அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்பப் பதிவு அட்டைச் செயலகங்களும், மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகமும் திறக்கப் படமாட்டாது என்பதனைப் பொதுமக்களின் கவனத்திற்குப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத் தருகின்றனர்.

## விமானம் நோட்டம்

(குருநகர்)

நேற்று நண்பகல் 12 மணியளவில் சிறிலங்கா வான்படையைச்சேர்ந்த 'அவ்ரோ' விமானம் ஒன்று யாழ்- நகரம் மற்றும் புறநகர், தென்மராட்சிப் பகுதிகளை பல தடவைகள் சுற்றி வட்டமிட்டு நோட்டமிட்டது.

நேற்று பகல், மாலை வேளைகளில் உலங்கு வானூர்திகளும் யாழ் வான்பரப்பில் அடிக்கடி பறந்து நோட்டமிட்டுச்சென்றன. (பா.21)

## செஞ்சிலுவை அதிகாரிகள் யாழ். விஜயம்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவைச் சேர்ந்த இரு அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். மருத்துவத்துறைக்குப் பொறுப்பான அதிகாரியும் காணாமல் போனவர்களைத் தேடும் பிரிவைச் சேர்ந்த அதிகாரியுமே இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளனர்.

(நி) (க)

## ஐ. தே. க. பொதுச்சபை விரைவில் கூடுகின்றது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்சபைக் கூட்டமும் செயற்குழு கூட்டமும் விரைவில் கூட இருப்பதாக கட்சி தலைமை காரியாலயமான "சிறிகொத்த" வட்டாரங்கள் "லங்கா தீப" பத்திரிகைக்கு தெரிவித்துள்ளன.

தென் மாகாணசபை தேர்தலில் படுதோல்வியடைந்ததை தொடர்ந்து கட்சியின் எதிர்கால நடவடிக்கை தொடர்பாக விரிவாக ஆராய இருப்பதாகவும் இவ்வாண்டில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தலில் எப்படி முகம் கொடுப்பது தொடர்பாக இம் மகாநாட்டில் விரிவாக ஆராயப்பட இருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளது.

மேற்படி இரு கூட்டங்களும் மிகவும் பதற்றமான ஓர் சூழ்நிலையில் நடைபெறும் என்றும் அநேகமாக கட்சிக்குள் மறைமுகமாக இருக்கும் கருத்து வேற்றுமைகள் இக் கூட்டத்தில் சூடுபிடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## சுத. கட்சி தேசிய மாநாடு ஏப்ரலில் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய மாநாடு ஏப்ரல் கடைசிவாரத்தில் அல்லது மே முதல் வாரத்தில் நடைபெறும் என்று தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளராக கட்சி என்னைத் தேர்ந்தெடுத்து பல மாதகாலங்களாகின்றன. ஆனால் அனுரா பண்டாரநாயகா சந்திரிகாவைத்தான் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப் போவதாக கூறிவருகிறார். சந்தர்ப்ப சூழ்நிலையைப் பொறுத்து கட்சி என்ன முடிவை எடுக்குமோ, அதன்படி அது நடக்கும் என சிறிமாவோ தெரிவித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், "தென்னிலங்கை (12ஆம் பக்கம் பார்க்க)

## சத்தியப் பிரமாணம் பதவி ஏற்க தேவையில்லை

(கொழும்பு)

கிழக்கு மாகாணம் மற்றும் வவுனியா உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவான உறுப்பினர்கள், தலைவர்கள், உப தலைவர்களின்பதவி ஏப்ரல் 4ஆம் திகதி முதல் ஆரம்பமாகிறது.

பதவியேற்கும் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இலங்கையின் அரசியலமைப்புக்கு "விசுவாசம் தெரிவித்து சத்தியப்பிரமாணம்" செய்து கொள்ள வேண்டும் என்பது நடைமுறை மரபாகும். இதனால் இங்கு தெரிவாகியிருக்கும் உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் ஏப்ரல் 4ஆம் திகதி யார்முன் இந்தப் பிரமாணத்தை எடுத்து பதவியேற்பது என்று தெரியாமல் உள்ளனர்.

இதுபற்றி வடக்குக் கிழக்கு (11ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை முடிவுகள் குறித்து பல்கலைமாணவர் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று வெளியான பரீட்சை முடிவுகள் குறித்து மாணவர் மத்தியில் அதிருப்தி நிலவுவதாக தெரிய வருகின்றது.

இப் பரீட்சை முடிவுகள் மாணவர் மீது பல்கலைக்கழகம் திட்டமிட்டு பழி வாங்கியதாகவும் இதனாலேயே இப்படியான மோசடியான ஒரு நிலைக்கு பல்கலைக்கழக மாணவர் தள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந் நடவடிக்கை சிறிலங்காவில் எம்பிலிப்பிட்டிய மாணவர்களுக்கு பாடசாலை அதிபர் பழி வாங்கிய நடவடிக்கையை விட மோசமானது என மாணவர்கள் தெரிவித்ததுடன் சம்பந்தப்பட்ட பகுதி சுவர் மீது தமது எதிர்ப்பைக் காட்டி சுலோகங்களை எழுதியுள்ளனர்.

மேற்படி பீட மாணவர்கள் அவசரகூட்டமொன்று நேற்று நடைபெற்றதாகவும் இன்று (12ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

புதிய கோழிக் கூடுகள், பாவித்த நல்ல நிலையிலுள்ள கைதியான கூரைத்தகரங்கள் விற்பனைக்குண்டு: ஞாயிறுகளில் மட்டும் வரவும் 14/1 பிளைச்சர் ஒழுங்கை, சுண்டுக்குளி (மகளிர் கல்லூரி அருகில்) (சி-8967)

**விற்பனைக்குண்டு**

சகல வசதிகளும் கொண்ட 2 பரப்பு காணியும், வீடும் திருநெல்வேலி சந்தைக்கு அருகாமையில் M. P. C. S. லேன் திருநெல்வேலி வடக்கில் உண்டு: தொடர்பு: திருமதி வனிதாதேவி விவேகானந்தம் செம்பாட்டுலேன், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு (மேஜர் முரளி பாலர் பாடசாலைக்கு அருகாமையில்) (7873)

**பெற்றுக்கொள்ளவும்**

ஜப்பான் ஏசியா துவிச்சக்கர வண்டியொன்று கடந்த 29 - 3 - 1994 அன்று பிறவுண் வீதியால் சென்று கொண்டிருந்த லொறியில் இருந்து விழுந்து கண்டெடுக்கப்பட்டுயாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது: உரியவர் ஆதாரம் காட்டி பெறவும் மாணவர் அவை (7895)

**எண்ணெய்க்குளியல்**

ரேசே உடலுக்குப் பிரதானம்: ஒலிவ் ஸ்நானப் பவுடரே எண்ணெய்க் குளியலுக்குப் பிரதானம். கேசத்தினதும், உடலினதும் ஆரோக்கியத்திற்கு ஒலிவ் ஸ்நான பவுடர். பக்கற் ஒன்று ரூ: 3. 25 பக்கற் கொண்ட காட் ரூ. 60- "மிக்கிவைத்"
(சி-8948)

**தவறிவிட்டது**

29-03-94 அன்று ஆரிய குளத்தடியில் றஞ்சனா, றஞ்சனாதேவி, வனிதா, துளசி, அனிதா ஆகியோருடைய உணவு முத்திரை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்; சன்மானம் வழங்கப்படும். (7901)

**நவீன மருத்துவம்**

வாத வியாதி, ஆஸ்துமா, தோல் நோய்கள், மலட்டுத் தன்மை, மூலரோகம், நாள்பட்ட காய்ச்சல், இருதய வியாதிகள், இறுஙர் பெரியவர்க்குரிய சகல நோய்களுக்கும் நவீன எலட்ரோனிக் பரிசோதனைகளும், சிகிச்சையும் இரெத்னம் வைத்திய சாலை, 129 ஸ்ரேசன் றோட் யாழ்ப்பாணம் (7838)

**புரோயிலர் குஞ்சு விற்பனை**

பிறிமா புரோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு ஓடர் கொடுத்தவர்கள் உடன் வந்து பெற்றுக் கொள்ளவும்: 'மல்லிகாபதி', சந்தைக் குழுக்கு ஒழுங்கை, மானிப்பாய் (7840)

## மென்பான விற்பனையாளருக்கு ஒரு நற்செய்தி!!

தற்போது பின்வரும் இடங்களில் TASTY மென்பானங்களை நீங்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்யலாம்:

1: மாருதி ஸ்ரோஸ், கே. கே. எஸ்- றோட், வல்வெட்டித்துறை
2. வேலவன் ஸ்ரோஸ், பருத்தித்துறை
3. சாயிகிருஷ்ணா வதிரிச்சந்தி, நெல்லியடி
4. முருகன் ஸ்ரோஸ், சிறுப்பிட்டி
5. அறிவகம் சாவகச்சேரி
6. சாந்தி ஸ்ரோஸ், கண்டி வீதி, வளை

TASTE LINE INDUSTRIES (PVT) LTD,
14, Seenier Lane,
JAFFNA
(சி-8922)

## பன்னிரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து

(01-04 94)

### செல்வன் ஞா. சுபேஸ்க்குமார்

உடுத்துறையை சேர்ந்த ஞானசுந்தரம் இன்பராம சுந்தரி தம்பதிகளின் செல்லப் புதல்வன் சுபேஸ் தனது பன்னிரண்டாவது பிறந்தநாளை பருத்தித்துறையில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக (02.04.94) அன்று கொண்டாடுகின்றார் இவரை அப்பா, அம்மா, அக்கா, பெரியண்ணா, சின்ன அண்ணா, ஜெயந்திரன் அண்ணா ஆகியோர் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்:

- குடும்பத்தினர்

(7824)

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்: 1989 - 09 - 07
இறைவனடியில்: 1993 - 04 - 01

### செல்வி நாகேஸ்வரன் யோகதர்சினி
(நித்யா)

கண்ட கனவெல்லாம் உன் குறும்புகள் அம்மா
கேட்ட குரலெல்லாம் உன் மழலை மொழிகள்
நித்யாவே நீ எம்மைப் பிரிந்துவிட்டாய்
மீண்டும் நீ எம்மிடையில் வந்துதிக்க மாட்டாயோ?

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அண்ணன்மார்,
உற்றார், உறவினர்

நாவற்காடு,
வரணி. (7884)

## நினைவு கூருகின்றோம்...
## 1994-04-01

1985-ம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை-பொத்துவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

※ **ரமேஷ்** (-- இராதாகிருஷ்ணன்-நாவலப்பிட்டி)

1986-ம் ஆண்டு யாழ் - பருத்தித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**ஸ்ராலின்** (கிருஷ்ணபிள்ளை சிறிகாந்தநாதன்-வடலிவளவு, புலோலி தெற்கு-பருத்தித்துறை)

1987-ம் ஆண்டு யாழ்-காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். மயூரன்** (இராசரத்தினம் செல்வகுமார்(பபி) -கலைமணிவீதி, கட்டப்பிராய்-நீர்வேலி)

1991-ம் ஆண்டு மட்டு-இலுப்பையடிச்சேனையில் சரடியனாறு முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**குகநாதன்** (இ. ரணசிங்கம்-காரைதீவு-அம்பாறை)

**அமலன்** (மகாதேவன் சுரேஸ்குமார்-9-ம் வட்டாரம், மண்டைதீவு-யாழ்)

மட்டு-வெள்ளாவெளிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். அஜித்** (இரட்ணசிங்கம் இரகுபரன்-கல்லடி, உப்போடை-மட்டு)

யாழ்-காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**வீரவேங்கை ஜொஸ்கோ** (கணபதி சிறிரஞ்சன்-பழையவளவு, தன்னாலை கிழக்கு-சரவெட்டி)

**சேது** (வீரசிங்கம் கிருபாகரன்-10-ம் வட்டாரம், சரவணை, வேலணை - ஊர்காவற்துறை)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வேப்பவெட்டுவான் வாசிகளான மூவர் உட்பட 04 தமிழ் விவசாயிகள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

※ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8970)

சமாதானம் சந்தோஷம் விடுதலை சுதந்திரம் ஆளுகை நித்தியம்

தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் (இயேசு) பெரிய காரியங்களைச் செய்வார் (யோவேல் 2:21)

## தேவன் உங்களுக்குசெய்பவைகளை வந்து பாருங்கள்! கேளுங்கள்!! அனுபவியுங்கள!!!

### இலங்கை பெந்தெகொஸ்தே சபையின்
# ஈஸ்டர் வார
### விசேஷ, சுவிசேஷ, தெய்வீக சுகமளிக்கும் ஆராதனைகள்

| இடம்; | நேரம்; | திகதி: |
| --- | --- | --- |
| இலங்கை பெந்தெகொஸ்தே சபை இல 111, கண்டி வீதி சுண்டிக்குளி | தினமும் மாலை 4. 30 மணிக்கு | 1994 மார்ச் 31ஆம் திகதி முதல் ஏப்ரல் 3 ஆம் திகதிவரை |

காலை 9.00 மணிக்கு பெரிய வெள்ளி, ஈஸ்டர் ஞாயிறுஆராதனைகள்
காலை 9.00 மணிக்கு வியாழன், சனிக்கிழமைகளில் காத்திருப்புக் கூட்டம்

இயேசு: "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37)

சுகம், சந்தோஷம், சமாதானம், பாவமன்னிப்பு, கெட்ட பழக்கவழக்கங்களிலிருந்து விடுதலை. யாவும் கிறிஸ்து இயேசுவில் மாத்திரமே உண்டு!

**வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப்படும்**
யாவரையும் அன்பாக அழைக்கிறோம்

∴ இலவச உட்பிரவேசம்
∴ காணிக்கை சேர்க்கப்பட மாட்டாது.
(7906)

விபரங்கட்கு:
இலங்கை பெந்தெகோஸ்தே சபை
111, கண்டிவீதி,
சுண்டிக்குளி.

# பொருளாதார லாபமே முக்கிய இலக்கு; சனநாயகம் என்பது இரண்டாம் பட்சம்

உறுதியான தேக்கு மரத்திற்கு மாத்திரம் இப்போது மியான்மார் பெயர் பெற்றது அல்ல; கொடிய இராணுவ அடக்குமுறை ஆட்சிக்கும் இப்போது மியான்மார் ''புகழ்'' பெற்று விளங்குகின்றது. (பர்மா - மியான்மார் - ரங்கூன் - யங்கூன் Yangon) அதிலும் குறிப்பாக 1989-ம் ஆண்டிலிருந்தே - ஐந்து வருடகாலமாக மியான்மாரில் சனநாயகம் மலரவேண்டுமென்பதற்காக போராடிய ஆங்சான் சூகி அம்மையாரை கொடிய ''தனிமைச் சிறையிலிட்டு'' அவரை அவரது குடும்ப உறுப்பினர் உட்பட எவருமே சந்திக்காவண்ணம் வாட்டி வருகின்றது. வெளிநாட்டிலிருக்கும் அவரது துணைவரை இதுவரையில் ஒரேயொரு தரம் மட்டுமே அவரை சந்திக்க அனுமதி வழங்கப்பட்டது.

இப்போது அமெரிக்க அழுத்தம் காரணமாக அமெரிக்க செனட்டரொருவர் முதல் தடவையாக சூகி அம்மையாரைச் சந்தித்துள்ளார். முன்னர் மண்டேலா போல இப்போது ''உலக மனச்சான்றின் கைதியாக'' சூகி அம்மையார் நடாத்திவரும் போராட்டம் உலகால் வியந்து போற்றப்பட்டாலும் அவர் விடுதலைக்காற்றை சுவாசிக்கும் காலம் இப்போதைக்கு இல்லையென்பதே கசப்பான உண்மையாகும்.

எனவே மனித உரிமைகள், சனநாயகம் என்பன பற்றி அதிகம் கவலைப்படும் இவ்வுலகம் மியான்மாரில் இப்போது என்ன செய்கின்றது என்கிற கேள்வி எழுவது இயல்பேயாகும். ஏனெனில் ஆசியாவின் இருபெரும் மேலாண்மை நாடுகளான சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் இருக்கும் மியான்மாரின் போக்கு எப்போதுமே விசித்திரமானது; மருமம் நிறைந்தது. ஏனென்றால் ஆங்கிலேயரிடமிருந்து பர்மாவை விடுவிப்பதற்காக போராடிய பர்மாவின் முதல் பிரதம அமைச்சரான ஆங்சான் (சூகி அம்மையாரின் தந்தை) அவரது பகைவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். பின்னர் சருவாதிகாரியாக தோற்றம் பெற்ற நீவின் என்பவர் அங்கு சோசலிச பொருண்மிய முறைமையொன்றை உருவாக்கப்போவதாகக் கூறி மியான்மாரை முற்றிலும் மூடப்பட்ட- தனிமைப் படுத்தப்பட்ட நாடாக்கினார். ஆனால் மாறும் உலகச்சூழலுக்கு அவரால் ஈடுகொடுக்க முடியாத நிலையில் 1988-ம் ஆண்டு இராணுவம் சதிப் புரட்சி மூலம் அவர் பின்புறம் தள்ளப்பட்டு இராணுவ புலனாய்வுத்துறை தலைவர் கின் நியுன்ட் (Khin Nyunt) முன்னணிக்கு வந்தார். சட்டத்தையும் ஒழுங்கையும் மீட்பதற்கான மன்று என ஒன்றை உருவாக்கி (SLORC- State Law and Order Restoration Council) இராணுவத்தினர் தாமே ஆளத் தொடங்கினர்.

இக் கட்டத்திலே மியான்மாரில் சனநாயக உரிமைகள் கோரி பெரும் போராட்டங்கள் வெடித்தன. குறிப்பாக மியான்மார் மாணவர்கள், புத்தபிக்குகள், சூகி அம்மையாரின் கட்சியினர் நடாத்திய போராட்டங்கள் கொடிய வன்முறை மூலம் ஒடுக்கப்பட்டன. 3000 பேர் கொல்லப்பட்டனர்; மாணவர்கள் காடுகட்குத் தப்பியோடினர்; சூகி அம்மையார் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்; சருவதேச அழுத்தம் காரணமாக இராணுவத்தால் வேண்டா வெறுப்பாக நடத்தப்பட்ட தேர்தலில் சூகி அம்மையாரின் NLD எனப்படும் சனநாயகத்திற்கான தேசியக் கூட்டணி பெரும் வெற்றி பெற்றது. ஆனால் இராணுவ அரசு ஆட்சி மாற்றத்திற்கு சம்மதிக்காத நிலையில் தேர்தலில் வெற்றி பெற்றோரே காடுகட்கு செல்லநேரிட்டது அங்கு 40 ஆண்டுகட்கு மேலாக மியான்மார் அரசுக்கு எதிராக போராடி வரும் பல்வேறு இனக்குழுக்களின் போராட்ட அமைப்புக்கள் ஆதரவோடு இன்று இவர்கள் செயற்பட்டு வருகின்றனர் இன்னும் பலர் இங்கிருந்து தாய்லாந்து இந்தியாபோன்ற பல நாடுகட்கு ஆதரவு கோரிச்சென்றனர். இது பழைய வரலாறு ஆனால், இங்கிருந்து தான் புதிய உலக ஒழுங்கில் ஆசியாவின் ஒழுங்கு எப்படியிருக்கும் என்பதற்கான புதிய வரலாறு ஆரம்பமாகின்றது.

போராடிவரும் பல்வேறுஇனக்குழுக்களில் சில மியான்மார் அரசோடு தாய்லாந்து, சீனா போன்ற நாடுகள் அழுத்தம் காரணமாக உடன்பாட்டிற்கு வருகின்றன இவ்வாறாக உடன்பாட்டிற்குவந்த நான்கு குழுக்களில் மூன்று DAB கூட்டினை ஆரம்பித்தவையாகும். இப்போது பேரிடியாக இன்னொரு செய்தியும் வந்துவிட்டது மியான்மார் அரசுக்கு எதிராக நீண்டகாலம் போராடியமிகப்பலம்வாய்ந்தஅமைப்பான KIO எனப்படும்கச்சின்விடுதலை அமைப்பு போர்நிறுத்தமொன்றை மேற்கொண்டு மியான்மார் இராணுவ அரசோடு பேசுகின்றது இந்திய எல்லைக்கு அண்மையில் வடமியான்மாரில் 6000 போராளிகள் கொண்ட பலம்வாய்ந்த இந்த அமைப்பு பர்மிய சனநாயகக் கூட்டணியை உருவாக்கியதில் முக்கிய பங்கினை வகித்தது. பேச்சு வார்த்தையோ, போர்நிறுத்தமோ DAB கூட்டணியே மேற்

உண்மையை நன்கு புரிந்துள்ளது. எனவே தனது சனநாயக விரோத செயற்பாடுகளை மறைக்க தனது பொருண்மிய வளங்களைப் பயன்படுத்த, பங்கிட வெளிநாட்டு மூலதனத்தை கவர தனது பொருண்மிய கட்டமைப்பை சருவதேச பொருண்மிய உலகோடு இணைத்துவிட்டது. எனவே சனநாயகம் பற்றி பெரிதும் அலட்டிக் கொள்ளாமல் யப்பானிய, மேற்குலக பல்தேச வர்த்தக நிறுவனங்கள் பெருமளவில் இங்கே முதலீடு செய்கின்றன மியான்மாருக்கு எதிராக பொருண்மியத் தடை விதிக்க வேண்டுமென்று கோரிய அமெரிக்க முடிவினை ஆசியான் அமைப்பு நாடுகள் மிகக் கடுமையாக எதிர்த்தன. 1989-ம் ஆண்டின்பின் மேற்கத்தைய, யப்பானிய நிறுவனங்கள் 415 மில்லியன் டொலருக்கும் மேற்பட்ட முதலீடுகள எண்ணெய்த்துறையில் மட்டும் முதலிட்டுள்ளன.

## மியான்மார் ஒரு சிறந்த உதாரணம்

ஏனென்றால் தொடக்கத்தில் மியான்மாரின் சனநாயகத்தை மலரச்செய்யும் இயக்கம் வலுவானதாக தோற்றம் பெற்றது. மியான்மார் அரசுக்கு எதிராகப் போராடிவரும் கச்சின் (Kachin) கரின் (Karen) மொன்ஸ் (Mons) சான் (Shan) வா (Wa) போன்ற இனக்குழுக்களின் போராட்ட அமைப்புகள், NLD கட்சியினர், மாணவர், பிக்குகள் அமைப்பினர் ஒன்று சேர்ந்து பர்மிய சனநாயகக் கூட்டணி DAB — Democratic Alliance of Burma) என பெரும் அமைப்பொன்றை உருவாக்கினர். அது மட்டுமன்றி 'நிழல் அரசு' ஒன்றும் உருவாக்கப்பட்டது இவையெல்லாம் மியான்மாரில் சனநாயகத்தை கொண்டுவர உலக ஆதரவைக்கோரின சூகி அம்மையாரின் போராட்டம் உலகின் கவனத்தை முற்றாக தம்பக்கம் ஈர்க்கும் என இவர்கள் நம்பினர் தாமே சட்டரீதியான மியான்மாரின் அரசாங்கம் என்று உலகம் கூறும் என நம்பினர் தொடக்கத்தில் உலகமும் அனுதாபம் காட்டியது ஐ நாவும் தீர்மானங்கள் நிறைவேற்றியது; சருவதேச அரங்குகளில் மியான்மார் வலுவாக கண்டிக்கப்பட்டது. சூகி அம்மையாரை விடுவித்து அவரிடம் ஆட்சியை ஒப்படைக்குமாறு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், மனித உரிமை அமைப்புக்கள் பலவும் வேண்டுகோள் விடுத்தன. தலாய்லாமா போன்ற மதத் தலைவர், நோபல் பரிசு பெற்ற சான்றோர், மதிப்புமிக்க அறிஞர் பலர் ஒன்று கூடி வேண்டினர். ஆனால் என்ன? மியான்மார் அரசு இதுவரை இறங்கி வரவேயில்லை; சூகி அம்மையாரை விடுவிக்கவேயில்லை இப்போது நிலைமை என்னவாக இருக்கின்றது?

DAB எனப்படும் பர்மிய சனநாயக கூட்டணியின் நிலை வரவர பலவீனமடைகின்றது. இந்தியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் உதவி கோரிச் சென்ற மாணவர்கள் வேதனையின் விளிம்பில் அகதிகளாக மாறிவிட்டனர். மியான்மார்அரசுக்கு எதிராக

கொள்ளவேண்டும் என்கிற அடிப்படைவிதியையே கச்சின் அமைப்பு மீறிவிட்டதாக DAB யின் தலைவரும் இன்னொரு பலம்வாய்ந்த போராளி



சூகி அம்மையார்

அமைப்பான KNU எனப்படும் கரின் தேசிய ஒன்றியத்தின் (Karen National Union) தலைவருமான போமியா (Bomya) பெரிதும் குறைப்படுகின்றார். இவ்வாறாக சனநாயகக் கூட்டணிக்குள் ஏற்படும் விரிசலானது இப்போ சூகி அம்மையார் கட்சியையும் பர்மிய மாணவர் அமைப்பினையும் பெரிதும் பலவீனப்படுத்திவிட்டது.

இவற்றுக்கு எல்லாம் என்ன காரணம்என்றுஎவர்க்கும்கேட்கத்தோன்றும். இங்கேதான் மிகக் கசப்பான செய்தியொன்று வெளிவருகின்றது. இன்றைய உலகில் தார்மீக கோட்பாடுகள் வாயளவில் பேசுவதற்கு மட்டும் பயன்படுகின்றது. செயலளவில்அவரவர் பொருண்மியநலன்களேமுதலிடம்வகிக்கின்றன. மியான்மாரில்காணப்படும்இயற்கை வளங்கள்உலகைச்சுண்டிஇழுக்கின்றன. மிகத் தரம்வாய்ந்த தேக்கு மரவளம், பெறுமதிமிக்க இரத்தினக்கற்கள், பெற்றோலியப் பொருட்கள், கனிய வளங்கள் என்பன உலகின் கண்களை நீதியின்பால் செல்லாது தடுக்கின்றன. மியான்மாரின் இராணுவ அரசோ இந்த யதார்த்த

மியான்மார் தொடர்பான ஆய்வாளர் ஒருவர் இதுபற்றி பின்வருமாறு குறிப்பிட்டார். ''மியான்மாரின் இராணுவ அரசானது தனது சனநாயக விரோதப் போக்கினைமறைக்க தான் ஒரு தாராண்மை போக்குள்ளதாக கருதும் வண்ணம் தனது கதந்திரமான சந்தை முறையை உலகின் கவனத்தை மறைக்கும் கையூட்டாக வழங்குகின்றது'' எனக் கடுமையாகக் கண்டித்தார்

மியான்மாருக்கு அருகில் உள்ள தாய்லாந்தின் போக்கு பற்றியும் இங்கே குறிப்பிடவேண்டும். தொடக்கத்தில் மியான்மாரின் இனக்குழு போராளி அமைப்புகட்கும் மியான்மார் மாணவர்க்கும் உதவிய தாய்லாந்து இப்போது தனது போக்கினை முற்றாக மாற்றிவிட்டது. இப்போது தாய்லாந்தில் இவ்விரு சாராரும் மிகக் கடுமையாக அடக்கப்படுகின்றனர், காரணம் வேறொன்றுமில்லை. மியன்மார் அரசானது தாய்லாந்துக்கு தனது இயற்கைவாயுவை விற்பதற்கு சம்மதித்துவிட்டது. ஏறத்தாழ 2 - 3 பில்லியன் டொலர் பெறுமதியான இவ்வுடன்பாடு மியான்மார் இராணுவ அரசுக்கு பெரும் சாதகமாகிவிட்டது. எனவே இப்போது இயற்கைவாயுவை எடுத்துச் செல்லும் பெரும் குழாய்கள் செல்லும்எல்லைப் பகுதிகளில் இயங்கும் மொண்ஸ், கரின் இனங்களின் போராளிக்குழுக்கள் இப்போது பெரும்இடர்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது அண்மையில் மியான்மார் அகதிகள் தங்கியிருந்த சில கிராமங்கள் இவ்வெல்லைப்புறத்தில் தாய் இராணுவத்தால் தீயிடப்பட்டன. இதற்குக் காரணம் இக்கிராமங்கட்கு ஊடாகவே இக்குழாய்கள் செல்லும் வழி அமைவதே என பர்மிய சனநாயகக கூட்டணி கண்டனம் தெரிவிக்கின்றது.

இங்கே சீனாவின் பங்கு பற்றி முக்கியமாக குறிப்பிட வேண்டும். இன்று மியான்மாரின்முதன்மை நண்பனாக, வணிகக் கூட்டாளியாக, பிரதான ஆயுத விநியோகத்தராக சீனாவே விளங்குகின்றது. மியான்மாரை எப்போதுமே தனது செல்வாக்கு வட்டத்துள் சீனா வைத்திருப்பதை இந்தியா எப்போதும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதும், ''மியான்மார் அரசுக்கு எதிராக போரிடும் போராளி குழுக்களை அடக்குவதற்கு தேவையான ஆயுதங்கள், தாங்கிகள், வேகப் படகுகள், மிகையொலி தாரை போர் விமானங்கள் யாவுமே சீனா வாரி வழங்குவதும் பிராந்திய அரசியல் நோக்கினை குறிப்பதாகும். இந்தவகையில் அண்மையில் KIO எனப்படும் கச்சின் விடுதலை தாபனம் மியான்மார் அரசோடு இணக்கத்திற்கு வருவதற்கு சீனாவே காரணம் எனப்படுகின்றது. ஏனென்றால் மியான்மாரின் கொடிய இராணுவ அரசோடு எல்லைப்புற வணிக உடன்பாடொன்றைசெய்த 1988-ம் ஆண்டு தொட்டு போராளிக் குழுக்கட்கான தனது ஆதரவினை வழங்கி குறிப்பாக தான் ஆதரித்த பர்மிய பொதுவுடமைக்கட்சியையேநட்டாற்றில் கைவிட்டது. பெருமளவு வளர்ச்சி பெற்ற இக்கட்சிக்கு சீனாவே உணவு, மருத்துவம், எரிபொருள் போன்ற சகல உதவிகள் அதுவரை காலம் வழங்கிவந்தது உதவிகள் நிறுத்தப்பட, அதனால் பொதுவுடமைக் கட்சிக்குள் குழப்பங்கள் ஏற்பட தனது யுனான் பகுதி எல்லையை சீனா மூடிவிட வேறுவழியில்லாது மியான்மார் அரசோடு உடன்பாடொன்றிற்கு இக்கட்சி வரநேர்ந்து பற்பல பிரிவுகளாகிவிட்டது.

புத்தமதமே பெரும்பான்மையினர் பின்பற்றும் மதமாக உள்ள மியான்மாரில் சிறுபான்மை முசுலிம்கள் பெருமளவு கொடுமைப்படுத்தப்படுவதையும் சீனா கண்டுகொள்வதில்லை அரக்கான் மாநிலத்தில் மட்டுமே பெரும்பான்மையினராக உள்ள முசுலிம்கள் மேல் அவிழ்த்து விடப்பட்டுள்ள அடக்கு முறையின் விளைவாக இலட்சக்கணக்கான 'றொகின்யா முசுலிம்கள்' எனப்படுவோர் ஏதிலிகளாக பங்களாதேசம் சென்று அவதிப்படுவது பற்றி சீனா சிறிதும் சிந்திக்காது. ஏனென்றால் பொருண்மிய நலன்களோடு மியான்மாரின் அமைவிட அரசியல் முக்கியத்துவம் சீனாவிற்கு பயன்படுகின்றது.

எனவே இப்போது சீனா மியான்மாரில் வெளியார் தலையீட்டால் அமைதி ஏற்படுவதை சனநாயகம் மலர்வதை விரும்புவதாக தெரியவில்லை முன்னர் அவுஸ்திரேலியா மியான்மார் சிக்கலில் நடுவராக செயற்படவந்ததும் இப்போது முன்னாள் அமெரிக்க சனாதிபதியான ஜிம்மி கார்ட்டர் தான் உருவாக்கியுள்ள கார்ட்டர் மன்றினை (Carter Centre) பயன்படுத்துமாறும் விடுத்தகோரிக்கையை அவர் மேற்கொள்ளும் முயற்சிகளையும் சீனா விரும்புவதாக தெரியவில்லை. இதே நேரத்தில் காற்றுள்ள போது தூற்றிக்கொள்ளும் நோக்கமாக மியான்மார் அரசோ சூகி அம்மையாரிடம் ஆட்சியை ஒப்படைக்காது விட என்னவென்ன செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்கின்றது. இப்போது இவ்வரசின் நோக்கம் தாய்லாந்து எல்லையில் உள்ள 'தூங்கும் நாய்க் குன்று'' (Sleeping Dog Rock) எனப்படும் குன்றைக் கைப்பற்றி அதன்மூலம் கரின்தேசிய முன்னணியின் தலைமையகம் உள்ள மானெப்புளோ (Manarplaw) பகுதியை நெருங்க முயல்கின்றது. இதன் மூலம்

(11-ம் பக்கம் பார்க்க)

பாலகுமாரன்

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

## நடாத்தும்

# உற்பத்தி எழுச்சிவாரம்-1994

- உற்பத்திக்கு ஒரு விழா
- உற்பத்தித் திறனுக்கு உன்னத பரிசில்கள்
- உற்பத்தியாளருக்கு திருவிழா
- ஆண்டுதோறும் தொடர்வது இவ்வாண்டும் நிகழ்கிறது

## காலம்: 1994 சித்திரை 24-ம் நாள் முதல் 30-ம் நாள்வரை

### (அ) விவசாயம்

1. உழவுப்போட்டி
2. கொத்துதல் போட்டி (ஆண் / பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம்)
3. உப உணவுப் பயிர்ச் செய்கைப் போட்டி (அவரையினம் / எண்ணெயினம்)
4. உற்பத்தி எழுச்சி வார பொது அறிவுப் போட்டி (மாணவர் / உழைப்போர்)

### (ஆ) விலங்கு வேளாண்மை தொழில் போட்டிகள்

1. நல்லினக் காளை
2. நல்லினப் பசு
3. முயல் வளர்ப்பு
4. நல்லினக் கடா
5. நல்லின மறி
6. தாரா வளர்ப்பு

### (இ) கைத்தொழில்

1. சிறு கைத்தொழில் போட்டிகள்

### (ஈ) சக்தியை பயன்படுத்தல்

1. புதிய கண்டுபிடிப்புகள்

### (உ) மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

### (ஊ) பனை தென்னை வள அபிவிருத்தி தொடர்பான போட்டிகள்

1. நீர் இறைக்கும் பட்டை இழைத்தல்
2. குட்டான் இழைத்தல்
3. கிடுகு பின்னுதல்
4. பனைமரம் ஏறுதல்
5. கூடிய பதநீர் உற்பத்தியாளர் தெரிவுப் போட்டி

### (எ) கடல் வளம் தொடர்பான போட்டிகள்

1. நீச்சல் போட்டிகள்
2. பாய்மரம் கட்டுதல்
3. துடுப்பு வலித்தல்
4. வலை பின்னுதல்

### (ஏ) புதிய உணவு அறிமுகப் போட்டிகள்

### (ஐ) கிராமிய பொதுசன அமைப்புகளுக்கிடையிலான போட்டிகள்

1. வீதி திருத்துதல்
2. வாய்க்கால் திருத்துதல்
3. குளம் புனரமைப்பு

மேற்படி விதிகளையும் விண்ணப்பப் படிவங்களையும் உங்கள் பகுதிக் கிராமிய உற்பத்திக் குழுக்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:- 15-04-1994**

விண்ணப்பப் படிவங்களை உங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களிடமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் மாவட்ட, கோட்ட, வட்டப் பணிமனையிலும் ஒப்படைக்கலாம்.

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(இ-8974)

தமிழீழ விடுதலைப் புலிகள்

# குழந்தைகள் நோய்த் தடுப்பு -

## சில தகவல்கள்

நோய்த்தடுப்பு மருந்துகள் பல பயங்கர நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கின்றன. தடுப்பு மருந்துகள் கொடுக்கப்படாத குழந்தைகளுக்கு தொற்று நோய்கள் வரும் ஆபத்து மிக அதிகம். அதே போன்று அவர்கள் போஷாக்கின்மைக்கு ஆளாகவும், அங்கவீனமுறவும், இறந்து போகவும் கூடிய சாத்தியங்கள் மிக அதிகம்.

நோய்த்தடுப்பு மருந்துகள் குழந்தைப்பருவத்தில் ஏற்படும் அபாயகரமான சில நோய்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கின்றன. நோய்த் தடுப்பு மருந்துகள் ஊசிமூலம் உடலில் ஏற்றப்படுகின்றன. அல்லது வாய்மூலம் கொடுக்கப்படுகின்றன. அம்மருந்துகள் குழந்தையின் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்குகின்றன. குழந்தையை நோய் தாக்குவதற்கு முன்பே நோய்த்தடுப்பு மருந்துகளைக் கொடுக்க வேண்டும். நோய் தாக்கிய பின் அம்மருந்துகளைக் கொடுப்பதால் பலனில்லை.

தடுப்பு மருந்துகொடுக்காத குழந்தைகளுக்குசின்னமுத்து, தொண்டைக்கரப்பான் (குக்கல்) நோய்கள் வரும் சாத்தியம் அதிகம். இந்த நோய்கள் குழந்தைகளுக்கு மரணத்தை ஏற்படுத்தக்கூடியன. மரணமடையாது தப்பிய குழந்தைகள் பலவீனமுற்று நலிவுற்று விடுவர். இதனால் ஏற்படும் போஷாக்கின்மையாலோ வேறு நோய்களாலோ அவர்கள் பின்னர் பாதிக்கப்பட்டு இறக்கும் ஆபத்தும் உண்டு.

போஷாக்கின்மையையும், மூளை வளர்ச்சிப் பாதிப்பு, குருட்டுத்தன்மை போன்ற ஆபத்துக்களையும் தோற்றுவிக்கக்கூடிய பிரதான காரணிகளுள் ஒன்று சின்னமுத்து நோயாகும்; தடுப்பு மருந்து வழங்கப்படாத ஒரு குழந்தை இளம்பிள்ளைவாத நோயால் (போலியோ) பாதிக்கப்படுவது பெரும்பாலும் நிச்சயம். இந்த நோய் தாக்கிய 200 குழந்தைகளுள் ஒன்றாவது வாழ்நாள் முழுவதும் அங்கவீனமுற்று அல்லலுறும் நிலை ஏற்படுகிறது. சுத்தமாகவைத்திராத காயங்களில் - குறிப்பாக] வெட்டுக்காயங்களில் - ஏற்புவலி கிருமிகள் உருவாகிப் பெருகுகின்றன; நோய்த் தடுப்பு மருந்து பெற்றுக்காது விட்டால், ஏற்புவலியால் பாதிக்கப்படும் பலர் மரணமடைய இடமுண்டு.

நோய்கள் பலவற்றிலிருந்து குழந்தைக்குப் பாதுகாப்பு அளிக்கும் அருமருந்து தாய்ப்பாலாகும். தாயின் உடலிலுள்ள நோய் எதிர்ப்புச்சக்தி தாய்ப்பாலின் மூலம் குழந்தைகளுக்குக் கிடைக்கிறது. குழந்தைபிறந்த முதல் சில நாட்களுக்குத் தாயின் முலையிலிருந்து சுரக்கும் மஞ்சள்நிறப்பால் (கொலஸ்ரம் அல்லது கடும்புப் பால் என அழைக்கப்படுவது) குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்தியை வழங்குவதில் அதி முக்கியமானதாகும்.

நோய்த் தடுப்பு மருந்துகள் மிக அவசியமும் அவசரமுமானவையாகும்; குழந்தை ஒரு வயதை அடைய முன்னர் ஆறு நோய்த் தடுப்பு மருந்துகளையும் கொடுத்துவிட வேண்டும். அத்துடன் அவற்றை உரிய காலத்தில் கொடுக்கவும் வேண்டும்;

குழந்தைகளுக்கு அவர்கள் பிறந்த ஆரம்பகால கட்டத்திலேயே நோய்த் தடுப்பு மருந்துகளைக் கொடுத்தலின் அதியாவசியம். குக்கல், இருமல் காரணமாக ஏற்படும் மரணங்களில் அரைவாசியும், போலியோ (இளம்பிள்ளைவாதம்) நோயினால் நிகழும் மரணங்களில் மூன்றிலொரு பங்கும், சின்னமுத்து நோயினால் ஏற்படும் இறப்புகளில் சரிவாசியும் குழந்தை ஒரு வயதை அடையுமுன்பே நிகழ்கின்றன.

நோய்த்தடுப்பு மருந்துகள் மூலம் பூரண பாதுகாப்பை பெற அவற்றை முழுமையாகப் பெற்றுக்கொடுக்க வேண்டும்; அத்துடன் அவற்றை உரிய காலவேளைகளில் கொடுக்கவும் வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் அவை எதிர்பார்த்த பலன்களைத் தராமட்டா) சில தடுப்பு மருந்துகளை ஒரு தடவை கொடுத்தால் போதும்; இன்னும் சிலவற்றைப் பல தடவைகளில் கொடுக்க வேண்டும்.

> நோய்த் தடுப்பு மருந்தைக் கொடுக்காது விட்டால் - உலகில் பிறக்கும் நூறு குழந்தைகளுள் மூன்று சின்னமுதது நோயினால் இறந்து விடும். இரு குழந்தைகள் குக்கலினாலும், இன்னுமொன்று ஏற்புவலியினாலும் இறந்து விடும். இதே போன்று, பிறக்கும் இரு நூறு குழந்தைகளில் ஒன்று இளம் பிள்ளை வாதத்தினால் பாதிக்கப் பட்டு வாழ்நாள் முழுவதும் அங்கவீன முற்றுத் தவிக்கும் அபாயத்துக்குள்ளாகிறது.

குழந்தை பிறந்த முதல்வருடத்துள் ஐந்து தடவை நோய்த் தடுப்பு மருந்து கொடுப்பதற்காக அதனைச் சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதைப் பெற்றோர் அறிந்திருத்தல் அவசியம்.

-பிறந்தவுடன் அல்லது பிறந்த சில தினங்களுக்குள் காசநோய்க்கெதிராக (சயரோகம்) தடுப்பு மருந்து கொடுக்க வேண்டியது அவசியம். இம் மருந்து ஊசி மூலம் வழங்கப்படும்.

- பிறந்து மூன்று மாதம் ஆகியவுடன் குழந்தையை சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டு சென்று தொண்டைக்கரப்பான், குக்கல், ஏற்புவலி ஆகிய மூன்று நோய்களுக்கெதிரான தடுப்பு ஊசியை (முதற் தடவை) போட வேண்டும் இந்த மூன்று நோய்களையும் தடுக்க ஒரேயொரு ஊசிமருந்துதான் ஏற்றுவார்கள். அதற்கு முக்கூட்டு மருந்து (Tripple) என்று பெயர்;

- இந்த முக்கூட்டு ஊசி மருந்தை (முதல் தடவை) ஏற்றும் போதே போலியோ (இளம்பிள்ளைவாதம்) நோய்க்கு எதிரான தடுப்பு மருந்தையும் பெற்றுக் கொள்ளலாம் இது குழந்தையின் வாய் மூலம் வழங்கப்படும் மருந்தாகும்.

- குழந்தை ஐந்து மாதம் நிரம்பியதும் (அதாவது முதல் தடவை மருந்து கொடுத்து 4 6 வாரங்களின் பின்) முக்கூட்டு ஊசி மருந்தை இரண்டாம் தடவை பெற்றுக்கொடுக்க வேண்டும்; இதேபோன்று ஏழு மாதம் நிரம்பியதும் (அதாவது இரண்டாம் தடவை மருந்து வழங்கி 4-6 வாரங்கள் கழிந்த பின்) மூன்றாம் முறை வழங்கப்படும் முக்கூட்டு மருந்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் போலியோ நோய்க்கெதிராக வழங்கப்படும் தடுப்பு மருந்தையும் இதே காலப் பகுதிகளில் (அதாவது 5ஆம், 7ஆம் மாதங்களில்) பெற்றுக் கொடுத்துவிட வேண்டும்.

ஒன்பதாம் மாதம் நிரம்பியவுடன் மீண்டும் குழந்தையை சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டு சென்று சின்னமுத்துக்கெதிரான தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். குழந்தைப் பராய நோய்களுள் சின்னமுத்து மிகப் பயங்கரமான ஒன்று பிறந்து சில மாதங்களுக்கு குழந்தையின் உடலில் சின்னமுத்து நோய் எதிர்ப்புச் சக்தி காணப்படும். தாயிடமிருந்து அது இயற்கையாகப் பெறப்படுகின்றது. குழந்தை ஒன்பது மாதங்களை அடைந்ததும் இந்த இயற்கைப் பாதுகாப்பு அற்றுப் போகின்றது. எனவே, இந்த வயதில் தடுப்பு மருந்து கொடுக்காவிட்டால் குழந்தைக்குச் சின்னமுத்து நோய் பீடிக்கும் ஆபத்துண்டு. ஆகவே, குழந்தைக்கு ஒன்பது மாதம் நிரம்பியவுடன் சின்னமுத்து தடுப்பு மருந்து கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டும்.

குழந்தை 18 மாதத்தை (ஒன்றரை வயது) அடைந்ததும் நான்காவது தடவை கொடுக்க வேண்டிய முக்கூட்டு ஊசி மருந்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். ஏதாவது காரணத்தினால்நோய்த் தடுப்பு மருந்துகளை உரிய வேளைகளிற் குழந்தைக்குக் கொடுக்க முடியாது போயின் அவற்றை எவ்வளவு சீக்கிரமாகக் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக கொடுத்துவிட வேண்டும்; இதற்கென சுகாதார ஊழியரைக் கலந்து யோசிக்க வேண்டும்.

> சுகாதார சேவையினரால் இலவசமாக வழங்கப்படும் நோய்த்தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் குழந்தைகளை பயங்கர நோய்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ளலாம். ஒரு குழந்தைக்கு நோய்த்தடுப்பு மருந்து வழங்க சுமார் 350 ரூபா செலவாகிறது. தாய் சேய் நலச் சிகிச்சை நிலையங்களிலும் மற்றும் மருத்துவ நிலையங்களிலும் நோய்த்தடுப்பு மருந்துகள் இலவசமாகக் கொடுக்கப்பட்ட போதிலும், பெற்றோர் பலர் தங்கள் பிள்ளைகளுக்கு இவற்றை ஒழுங்காகப் பெற்றுக் கொடுப்பதில் அக்கறை காட்டுவதில்லை. சுகாதார சேவையினரால் தடுப்பு மருந்துகள் வழங்கப்படாவிடில், அவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை சமூக ஸ்தாபனங்கள் மூலம் பெற்றோர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**மதன்**

'சுகவீனமுற்றுள்ள குழந்தைக்கு நோய்த் தடுப்பு மருந்துகள் கொடுப்பதில் எவ்வித ஆபத்தும் இல்லை. தடுப்பு மருந்து வழங்கத் தமது குழந்தைகளைக் கொண்டு வராமைக்கான பிரதான காரணிகளுள் ஒன்றாக, குழந்தைகள் காய்ச்சல், இருமல், தடிமல், வயிற்றோட்டம் போன்ற சாதாரண நோய்களால் பீடிக்கப்படுவதைப் பெற்றோர் கூறுவதுண்டு; சிறுசிறு நோய்கள் மற்றும் போஷாக்கின்மையால் பீடிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்துகளை வழங்க சிலவேளை சுகாதார ஊழியர்களும் மறுப்பதுண்டு; இது தவறு. சிறுசிறு நோய்கள் மற்றும் போஷாக்கின்மையால் குழந்தைகள் பீடிக்கப்பட்டிருந்தாலும் அவர்களுக்குத் தடுப்பு மருந்து வழங்குவதில் ஆபத்து இல்லை என்பது நவீன வைத்திய ஆராய்ச்சிகளின் முடிவு; சின்னமுத்து குக்கல் (சுக்குவான்) போன்ற நோய்கள் வேகமாகக் காணப்படும் பகுதிகளில் தடுப்பு மருந்து வழங்குவதை நிறுத்தக்கூடாது பொதுவாகக்கூறுவதாயின், நோயுள்ள ஒரு குழந்தையின் நிலை என்ன, நோயின் தன்மை யாது என்பன பற்றிய முடிவுகளை வைத்தியரே எடுப்பார். அந்தயைய குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து வழங்க முடியுமா இல்லையா என்பதையும் அவரே தீர்மானிப்பார். எனவே, குழந்தைகளைத் தடுப்பு மருந்து கொடுக்கும் நிலையங்களுக்குக் கொண்டுவருதல் பெற்றோரது கடமை

தடுப்பூசி போட்டதும் சில குழந்தைகள் அழக்கூடும். சிலருக்கு காய்ச்சல் ஏற்படலாம். சில பிள்ளைகளுக்கு ஊசி போட்ட இடத்தைச் சுற்றி அரிப்பு ஏற்படலாம். ஏனைய நோய்களின்போது போன்றே இத்தகைய சந்தர்ப்பங்களிலும் குழந்தைக்கு நிறைய உணவும் பானங்களும் கொடுக்க வேண்டும். தாய்ப்பால் வழங்குதல் மிகப் பொருத்தமானது. காய்ச்சலோ, அரிப்போ அல்லது ஏனைய அசௌகரியங்களோ பாரதூரமாக இருப்பின் அல்லது மூன்று நாள்களுக்கு மேல் நீடிப்பின் குழந்தையை வைத்தியரிடம் கொண்டு செல்ல வேண்டும்

### கர்ப்பிணித் தாய்மார் நோய்த் தடுப்பு

கர்ப்பிணித்தாய்மார் அனைவரும் உரிய காலத்தில் ஏற்பு வலித் தடுப்பு ஊசியை இருமுறை போட்டுக் கொள்ளல் வேண்டும். உலகின் பல பகுதிகளில் தாய்மார் சுகாதாரமற்ற இடங்களிலேயே குழந்தைகளைப் பிரசவிக்கின்றனர். இதனால் தாய்க்கும் பிள்ளைகளுக்கும் ஏற்புவலி ஏற்படும் ஆபத்து அதிகம்; குழந்தைகளுக்கு உயிர் ஆபத்தை விளைவிக்கக்கூடிய முக்கியமான நோய்களில் ஏற்புவலியும் ஒன்று. தாய்மார் ஏற்புவலித் தடுப்பு மருந்து பெற்றிராத பட்சத்தில் பிறக்கும் ஒவ்வொரு நூறு குழந்தைகளுள் ஒன்று மரணமடையும்.

ஏற்புவலியை உருவாக்கும் விஷக்கிருமிகள் அசுத்தமான காயங்களில் வளருகின்றன. சுத்தம்செய்யப்படாத (விஷக்கிருமி - நீக்கப்படாத) கத்தி ஒன்றை உபயோகித்து தொப்புள் கொடியை வெட்டும் பட்சத்தில் அக்காயத்தில் இத்தகைய விஷக் கிருமிகள் வளர

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கிப் பெருகிவரும் மின்காந்த அலைகள்

கடந்த நூற்றாண்டிலே இலத்திரனியலில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக மின் உபகரணங்களின் பாவனை அதிகரித்துள்ளது. மின்சாரம் ஒரு சம்சாரம் என்பது போல் சகல தொழிற்பாடுகளிலும் மின் பாவனை அதிகரித்துள்ளது. பல துறைகளிலும் தோளோடு தோள் நிற்கும் மின்சாரம் பாந்தள் உட்பகை கொண்டவர்களைப் போல உடன் இருந்தே உயிரியின் மேல் பல தாக்கத்தை ஏற்படுத்துவதை எவரும் மறுக்க முடியாது. இவற்றுள் மின்காரணமாக உண்டாகும் மின்காந்த அலைகளின் தாக்கம் குறிப்பிடக்கூடியது.

வடக்கே தலைவைத்து உறங்குதல் நல்லதல்ல என பழைய காலத்தில் இருந்து ஒரு கருத்து நிலவி வருகின்றது. இதற்கான காரணம் என்னவெனில் புவியால் உண்டாக்கப்படும் புவிக்காந்தப்புலம் உயிரியைப் பாதிக்கின்றது. ஏனெனில் உயிர்க் கலங்களில் நடைபெறும் அனைத்துத் தொழிற்பாடுகளும் மின் காந்தச் சிக்கல் பொறிமுறைகளே.

சகல உயிரினங்களினதும் உடற்றொழிலியலில் அவற்றின் கலங்களில் நிகழும் ஒரு சீர்த்திட நிலை மூலம் நடைபெறுகின்றது. இதற்கு கலமென்சவ்வில் உருவாக்கப்படும் மின்காந்த அலைகள் உதவுகின்றன. இவை $10^{-15}$ ரெஸ்லா காந்தப் புலத்தைக் கொண்டிருக்கும் இயற்கை காந்தப்புலம் $10^{-6}$ ரெஸ்லா வரையுள்ளது மனிதனால் பாவனைக்கு கொண்டு வரப்பட்ட மின்கடத்தி மின்சாதனங்கள் மூலம் மிகை தாழ் (50HZ-60HZ) மின்காந்தப்புலம் உருவாக்கப்படும் இப்புலம் இயற்கைக் காந்தப்புலத்தை விட அதிகமாக உள்ளதால் உயிரியன் மீது பெருமளவு பாதிப்பை ஏற்படுத்துகின்றது இப் பாதிப்புகள் கலமென்சவ்வின் அழுத்தம் மாற்றப்படுவதிலிருந்து ஏற்படுகின்றது

உயிரிகளில் நரம்புத் தொகுதியில் கணத்தாக்கங்கள் மின்காந்த அலைகளாகவே செலுத்தப்படுகின்றது எனவே இவற்றில் ஏற்படும் மின்காந்தத் தாக்கம் நரம்புத் தொகுதியைப் பாதிப்பதன் மூலம் உளபாதிப்பு ஏற்பட வழிவகுக்கின்றது.

இதய இயக்கி எனப்படும் இதயத்துடிப்பை ஆரம்பித்து வைக்கும் அமைப்பின் செயற்பாடு பாதிக்கப்படுவதனால் இதயத் தொழிற்பாடு பாதிக்கப்படுகின்றது. புற்றுநோய் ஆபத்தும் உண்டு; மேற்கூறிய பாதிப்புக்கள், கொள்கையளவில், அதாவது குறிப்பிடத்தக்களவில் பாதிப்புக்களை இதுவரை ஏற்படுத்தவில்லை. ஆனால் காலப்போக்கில் இப் பாதிப்புகள் பரவலாம்; வெள்ளம் வரமுன்னர் அணை போட வேண்டும் அல்லவா? எனவே இப்பாதிப்புக்கள் ஏற்படாது இருக்க காப்பு வழிமுறைகள் கையாளல் வேண்டும்;

உருவாக்கப்படும் மின் அளவைக் கட்டுப்படுத்துவதன் மூலம் காந்தப்புலத்தின் அளவைக் கட்டுப்படுத்தலாம். மின்காந்தப்புலம் உயர்கடத்திகள் அண்மையில் குடியிருப்புகள் அமைப்பதனைத் தடுத்தல், குடியிருப்பு உள்ள இடங்களில் தொழிற்சாலைகளை, வானொலி நிலையம் போன்றவற்றை அமைப்பதனைத் தடுத்தல், மின் சாதனங்களுடன் தொழில் புரிவோர் குறைந்த நேரமே வேலை செய்தல், காந்தக்காப்புக் கவசம் அணிதல் போன்ற நடவடிக்கையை மேற்கொள்ளுவதன் மூலம் மின் காந்த அலையில் இருந்து நாம் எம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.

சி. யமுனாநந்தா
மருத்துவ பீட மாணவன்
யாழ் பல்கலைக்கழகம்

சிறுகதை

# மூக்கையா

வே. கிங்ஸ்லி

வழமைபோல் அந்த நாலெழுத்துக்களும் கூட்டுச் சேர்ந்து இளைய மகளின் கலியாணத்தை ஒருவாறு நிறுத்தி விட்டிருந்தன.

சிற்றாண்டி தபாற்காரன் நேற்றுக் காலை கொண்டு வந்து நீட்டிய இரண்டு கடிதங்களையும் பெற்றுக்கொண்டதோடு மூக்கையா ஊர் நிலைமைகளையும் விசாரித்துத் தீர்த்தார்.

இன்னுமொரு சிறியபோராளியை அழைத்து கடிதத்தை மீண்டும் படிக்கச் சொன்னார். அதேதான்; வேறு இல்லை. அதற்காக அவர் பெரிதும் வருத்தப்பட்டதாகத் தெரியவில்லை. எனினும் இடையிடையே வந்துபோன ஏதோ நினைவுகள் அவையாக இருக்கலாம்.

அது ஒரு நீல நிற மலைத் தொடரையண்டிய பிரதேசம். அங்குதான் பெருவாரியான முகாம்களைக்கொண்ட ராணுவக் கிராமம் ஒன்று அமைந்திருந்தது. பகலை விழுங்கிவிடும் காடு. சில கிராமவாசிகளுக்கும், கால் நடைகள் கட்டி மேய்ப்பவர்களுக்கும், வேறு சிலருக்கும் அந்த இடம் தெரியும்.

மூக்கையா கொட்டிலுக்குள் இருந்து வெற்றிலை போட்டவர், வெளியில் வந்து தோளில் கிடந்த துவாயை எடுத்துத் தலைப்பாகை கட்டிக் கொண்டு மண்வெட்டியுடன் சேனைக்குப் புறப்படும் நேரம், சிறியபோராளிகளும் காலைப் படிப்பு முடிந்து ஆரவாரமாக வெளியேறினார்கள்.

சிறிய போராளிகளும் 'கல கல'வென சேனைக்கு வந்தார்கள். அரசியல் முகாமில் இருந்து சேனை அதிகதூரம் இல்லை.

மூக்கையாவை 'அப்பா' என்று அழைப்பார்கள்; சில போராளிகள் 'ஐயா' என்றும் அழைத்தார்கள். மூக்கையாவிற்கு இந்தத் தைப்பொங்கலுடன் அறுபது வயதாகி விட்டதாம். அவர் இந்த தைப்பொங்கலுடன் சென்ற மூன்று தைப்பொங்கல்களையும் காட்டிலிருந்தே வரவேற்றார். சுமையுடன் நடையில், நடையுடன் மழையில்.

நடுக்காட்டிற்குள் உருமறைப்புச் செய்யப்பட்டிருந்த சிறிய, அழகிய அவருடைய சேனையில் இருந்து நிறையவே மரக்கறி வகைகள் விளைந்தன. எல்லாம் மூக்கையாவின் முயற்சிதான். அரசியல் முகாமோடு சேர்த்து மேலும் சில முகாம்களுக்கு தனது முயற்சியின் விளைவு பகிரப்பட்டதில் அவருக்குப் பரம திருப்தி.

சேனையில் முகாம் போராளிகள் தினசரி வந்து மூக்கையாவிற்கு உதவினார்கள். இந்தச் சிறிய போராளிகள் மூக்கையாவிடம் ஒரு தொகைக் கேள்வி கேட்டு அதிகம் தொல்லை தந்தார்கள். ''டேய் சின்னப் பசங்களா... கொடுத்த வேலைய செமத்தா செஞ்சிக்கிட்டு இருங்கடா டேய்'' என்று மூககையா சத்தமிட்டபொழுது, கும்பலாகச் சிரித்தார்கள். அவரைப்போலவே அனேகம்பேர் கதைத்துப்பழகினார்கள். ''வந்தேன்னா அம்புட்டுத்தா'' என்று உறுக்கிவிட்ட பொழுதெல்லாம் பிரளயப்பட்டு அவரவர் வேலைக்கு ஓடினார்கள்.

கொடிமிலாறு குற்றிய தமிழன்பனும் தமிழ் வாணனும் வேலையோடு ஏதோ கதைத்தவர்கள், வேலையை விட்டு விட்டு துப்பாக்கியைத் தோளில் போட்டுக்கொண்டு மூக்கையாவை நெருங்கி ஏதோவொன்றை தீர்க்க வந்தனர். தமிழன்பன் 'அப்பா...' எனத் தொடங்கினான். ''ஏன்டா கொடிமிலாறு குத்தியாச்சா'' - மூக்கையா 'நொழக்' என்று கேட்டார்.

''இல்லை''-ஒரு கேள்வி கேட்டக்கப்போறம்'', - இருவரும் கூறினார்கள். ''ஒரு கேள்வி ஒரு கேள்வின்னு எத்தனை கேள்விடா கேட்டீங்க இனிமே கேள்வி மேலே கேள்வி கேட்டு வேலையை இழுத்தடிச்சுக்கிட்டு தொந்தரவு பண்ணீங்க கொண்ணுபுடுவ அரமா'' அவர்கள் இருவரும் அவரின் வீட்டுக்கடிதங்களை படித்துக் காட்டும் வாடிக்கையாளர்கள். அதனால் அந்த நினைவு வந்திருக்கவேண்டும். ''கேட்டு முடியிங்கடா'' என்றார். ''அப்பா நீங்க ஏனப்பா இப்படிக் கிடந்து கஷ்டப்படுறீங்க, ஊர்லபோய் வீட்டோட இருக்கலாமே?'' தமிழன்பன் கேட்டான். ''அட போடா இதா ஒங்க கேள்வியா - புத்தி கெட்டவனுகளே, ஆமி என்ன சும்மா விட்டுடுவானா''. - என்றார் விடையும் கேள்வியுமாக இருவரும் சத்தமிட்டுச் சிரித்தார்கள் ''அப்பா நீங்க, நான் இயக்கம்'' எண்டுபோய்சொன்னாலும் ஆமி ஒத்துக்கொள்ள மாட்டான், ரெண்டு அடிதந்து துரத்திவிடுவான்'' மூக்கையாவும் பதிலுக்குச் சிரித்துக் கொண்டார்- ''அடே காலிப் பயலுகளா, நீங்க ஏண்டா இயக்கத்துக்கு வந்தீங்க - ''போராட'' மிடுக்காகக்கூறினார்- அதே தொனியில், ''நாமட்டு என்ன இப்படியே தோட்டம் போட்டுக்கவா வந்தே, நானுந்த ஒங்கமாதிரி ஆமிக்கு சுடுவேண்டா - இங்க யாருக்கும் சேனை செய்யத் தெரியாதில்ல அதா ஒங்க அத்தனபேருக்கும் பழக்கிவுட என்ன அனுப்பிச்சாங்க...... பேரன்மாரை வென்ற பாட்டனைப்போல் ஒரே மடக்கில் மடக்கிவிட்டார் மூக்கையா.

அவரின் சொந்த எண்ணங்கள் சிந்தனைகளை மறப்பதற்கு அந்த சேனையொன்றே போதுமென்று இருந்தது-தன்னையே மறப்பதற்கு அந்தப் போராளிகள் மீதியாக இருந்தார்கள்- இதுவே நிம்மதி தந்த வாழ்வாக கழிந்து சென்றது.

ஃ ஃ

83 ஜூலை...எல்டன் குறுப்பில் மூக்கையாவின் மூத்த மகள் குடும்பத்திற்கு நேர்ந்த கதியோடு அவர் பசறையில் மட்டக்களப்பிற்கு பிள்ளை குட்டிகள் சகிதம் அகதியாக வந்து சேர்ந்தது ஒரு பெரிய கதை. மட்டக்களப்பில் இருந்து தொழில் வசதி தேடி பொத்துவிலுக்குப் போய்ச் சேர்ந்து வாழ்ந்தது இன்னோர் பெரிய கதை. போன கையோடு உதவிக்கிருந்த ஒரே மூத்த மகன் இயக்கத்தில் சேர்ந்து கொண்டான். பின்னர்தாண்டியடியில்எஸ் ரி எவ் உடனான மோதலொன்றில் அவன் வீரச்சாவடைந்தான்.

90 ஜூன் ... பொத்துவிலில் இருந்து தமிழர்கள் அடித்து விரட்டப்பட்டபொழுது, மூக்கையா குடும்பசகிதம் கோமாரிக்கு அகதியாக வந்திருந்தார் அங்கு நூற்றுக்கணக்கான தமிழர்களுக்கு நேர்ந்த கதியோடு மூக்கையா தனதுமூன்று ஆண் பிள்ளைகளுடன் ஊரில் இருந்தே தலைமறைவாகிவிட்டார்.

மூக்கையாவின் மனைவியும் திருமணமாகாத இரண்டு பெண்பிள்ளைகளும் கோமாரி அகதிமுகாமில் இருந்தனர், அவர்களை எஸ் ரி எவ் புலிகளுடன்தொடர்பு' என்று அடித்துத்துரத்திவிட்டது, முனியம்மாவும் பிள்ளைகளும் அங்கிருந்துதிருக்கோவிலில்உள்ள ஒரு அகதி முகாமில் தஞ்சம் அடைந்தார்கள்; அங்குள்ள தேசவிரோதிகள் விசாரித்தவுடன் 'புலிக்குடும்பம்' இங்கு இருக்க வேண்டாம் மீண்டும் பசறைக்கே போய்ச் சேருங்கள் என்று. ஏளனம் செய்து துன்புறுத்தி துரத்திவிட்டார்கள். அப்படியே அகதிகளாக அவர்கள் மூக்கையாவின் தொடர்பைப்பெற சித்தாண்டிக்கு வந்து தட்டினார்கள், சிற்றாண்டியிலும் இராணுவமும் தேசவிரோதிகளும் இல்லாமல் இல்லை, ஆயினும் அவர்கள் கண்டமாதிரி வாலாட்ட முடியாது. இங்கு துரத்த நினைத்தால் பாதகம் அவர்களுக்குத்தான்.

ஃ ஃ

முகாமில் ஏதுபட்டநாளெல்லாம் சுவையாக சமைத்துப் போட்டார் மூக்கையா அவருக்குத்தெரியாத ஏலக்காயா, கறுவாவா, கராம்பா மணங்குணமான அவரின் சமையலைவிட சமையலைப்பற்றி அவர் சொல்லுவது தான் சுவை, நாக்கில் நீரூறும். அப்படி ஆற்று மீன் குழம்பை நேற்றே வைத்திருப்பர். சேனையில் பிடுங்கிய பாகலை உடனேயே சுண்டித்தந்தார்.

முகாம் எல்லாம், நிரந்தரமானதல்ல. நேரங்காலமற்று பாதுகாப்பிற்காக வேறிடங்கள் மாறவேண்டிவரும். அதிகாலை இரண்டு மணிக்குமுகாமில் அலேட் விசிலடித்து, அனைவரும் அத்தனை உடமைகளுடன் சில நிமிடத்தில் அணிவகுத்துநின்றபோது மூக்கையா கடைசிக்கு மூன்றாவது ஆளாக மூட்டையுடன் நின்று குளிரோடு போராடினார். இப்படி ஏகப்பட்ட சந்தர்ப்பங்கள்.

மூக்கையா அரிவரியும் படிககாதவர், உலக அரசியலை அவர் கரைத்துக்குடிக்கவில்லை, எனினும் மூக்கையாவிற்கு தெரிந்ததெல்லாம், ''இந்த' அரசாங்க இருக்கில்ல அரசாங்க அவனுகள நம்பவே கூடாதுயா நம்ப பொடியங்க மட்டும் இப்படி ஒரு துவக்கம் துவங்கலென்னா நம்பளெல்லாம் எங்கேயாச்சும் கடல்ல கிடல்லதா புடிச்சித்தள்ளிவிட்டுடுப்பானுங்க'' என்று கூறும் சொந்த அனுபவத்து அரசியலாகவே இருந்தது.

போன வருடம் ஒரே மாதத்திற்குள் ஒருவன் பலாலியில் நடந்த ஒரு மோதலிலும் ஒருவன் வந்தாறுமூலையில் ஏற்பட்ட திடீர்த் தாக்குதலிலும் வீரச்சாவடைந்ததையும், மற்றவனுக்கு மைன்ஸ் வெடித்து ஒரு கால் இல்லாமல் போனதையும், வீட்டு நிலைமைகளையும் முழுக்கவே அறிந்து -தெரிந்து வைத்திருந்த மூக்கையா, கல்லுமாதிரித் திரிந்தபோது, ''என்ன கல்லுமனம் இவருக்கு'' என எரிச்சல்கூட வந்ததுதான், அவரை நினைக்க. இதைப்பற்றிக்கேட்டால் பெரிதாகப் புரட்சி வசனங்களையா பேசப்போகிறார். ஏதோ சொல்வதையெல்லாம் ஏற்றுக்கொள்வார்; அவ்வளவுதான் இந்த அபார மனசு அவருக்கு எப்படி வந்ததென்று அவருக்கே தெரியாமல் இருக்கும், இயைபாக்கத்தில் புதிய பரிமாண வளர்ச்சி இதுவாக இருக்கும்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு மனைவி பிள்ளைகள் பார்க்க வந்துள்ளார்கள் என்ற செய்தி நேற்று மாலை கிடைத்த போது உடனேயே புறப்பட முடியவில்லை மயிலவப்பவான் ஒன்றும் பெரிய தூரமா என்ன, காலுக்குள் இருக்கும் சிறிய காட்டுக் கிராமம்- நாலு நடையில் போகலாம்; நேரந்தான் பத்தாமல் போயிற்று, ஆகப்போக பதினைந்து மைல்-

இங்கு, இந்தா என்றால் இருபது மைல்; அந்தா என்றால் அறுபது மைல்- இந்த நடைமுறைக்கு மூக்கையாவும் எப்பவோ பழகிப்போய்விட்டார்-

காலையில் எழுந்து ஆற்றுக்குப் போனார்; முழுகினார்- அங்குமிங்கும் திரிந்து ஆயத்தமாகினார்-அவருக்குமனம் அங்கில்லை; எண்ணங்கள் எதை எதையோவெல்லால் முடிக்கி விட்டிருந்தது-

இளைய மகளுக்கு இருபத்தொன்பது வயதாகிறதென்று முன்பொரு சந்தர்ப்பத்தில் முனியம்மா சொன்னது நல்ல ஞாபகம்- எப்படியும் அது நாலு வருடத்திற்கும் கூடுதலாக இருக்கும்- அவளுடைய திருமண ஏற்பாடு பற்றி எதையுமே அறிவிக்கவில்லை; அதற்கு முடியாமல் போய்விட்டதோ என்னவோ தெரியாது- திருமணம் அலைந்துவிட்ட செய்தி மட்டும், ஆரம்பமில்லா முடிவுமாதிரி கடிதத்தில் வந்தது பொங்கலன்று அதனாலேயே கடிதத்தை இரண்டு மூன்று தரம் படித்துக் காட்டியும் விளங்கவில்லை- சட்டுப் புட்டென்று ஆயத்தமான திருமணந்தான் இது- அதே கதியில் நின்றதற்குக் காரணம் இருக்க ஒரு சொந்த குடிசை யாவது இல்லாமல் போனது- மாப்பிள்ளை மகசீனில் இருந்து வந்து ஒரு மாதம்- அரையுயிராக திருமணம், பாதுகாப்பிற்கும் சேர்த்துத்தான்- அவர் இன்னுமொருதரம் யோசித்தார், ''மாப்புள்ள நம்ம ஊரு பயனோ இல்லென்னா இங்க யாராச்சுமோ......''

......இரண்டு விமானங்கள் இரைந்து விரைந்தது-அச்சகக் கொட்டிலுக்குள் ஒரு குரல் ''அடுப்பில்புகை, புகை'' என்று கத்துவது கேட்டு, சிறிய போராளிகள் ஓடியோடிப்போய் அணைத்தார்கள்-

செந்தமிழன் இளைய இராணுவ வீரன் மாதிரி வந்து நின்று ''அப்பா நாங்க வெளிக்கிடுவம்'' என்றான் திரும்பியவர், ''இம்மூட்டு நேரமும் என்னடா பண்ணே, பொறுப்பாளர்கிட்டே எல்லாம் வெபரமா சொன்னியா'' என்றார்- ஓமோம்; நீங்க......'' செந்தமிழன் கேட்க, ''நாந்தா நேத்தே அலுவல் முடிச்சிட்டேனே'' இருவரும் ஆயத்தமானார்கள்-

சிறிய போராளிகள் காலைப்படிப்பிற்கு கொலுவாக வந்தார்கள்-மூக்கையா,

''இந்தா பசங்களா போயிட்டு வரட்டுமா'' எட்டக் கூறினார். அவர்கள் ஓடி வந்து அவரின் தோளில் தொங்கித் துள்ளினார்கள். ''கலாட்டா பண்ணாம வுடுங்க. நாளைக்கு சாயங்கால அம்மாவுங்கள பாத்திட்டு திரும்பும் போது மயிலவட்டவான்ல அத்தனபேருக்கும் டொபியி வாங்கிட்டு வரேன். வரட்டுமா.''

மூக்கையா உச்சி முகர்ந்து விட்டு விடைபெற்றார் செந்தமிழனுடன்.

மயிலவட்டவானுக்கு சுத்தமாய்ப் போய்ச்சேர மதியத்தைத் தாண்டும்.

நான்கு மணிநேர நடைக்குப் பின்............

அரைவாசிக்கும் அதிகமான தூரத்தைக் கடந்து விட்டார்கள். அவருக்கு நடையிலேயே துண்டு துண்டாய்ப் படமோடியது. அதுகூட நடையின் சோர்வை மறைக்க வல்லது. அவன் ''அப்பாஅப்பா'' என்று எதையோ வெல்லாம் கதைத்து வந்தான், அவர் பொதுவாக ''ஆமா'' போட்டுக் கொண்டார். சில இடங்களில் நின்று நின்று குறி பார்த்துவிட்டு மீண்டும் துப்பாக்கியை தோளில் போட்டுக் கொண்டு நடந்தான் செந்தமிழன்.

எதிரே அந்த ஆறு வந்தது. பத்துப் பதினைந்தடி நீரைச் சுமந்து கொண்டு பாயும் ஆறது. இரண்டு கிழமைக்கு முன் கடக்க முடியாமல் பொங்கியது. இன்று ஊதி வெடித்த வலூன் மாதிரிக் கிடந்தது. ஆறு கடந்து ஒரு மைல்தான் காடு, பிறகு வெளி தான்.

குளு குளுவென்று இருந்த ஆற்று மணலில் சிறிது நேரம் களைப்பாறிவிட்டு நடப்பதென தீர்மனித்துக் கொண்டு ஆற்றுக்குள் காலடி எடுத்து வைத்த போது தான் அந்த திடீர்ச்சம்பவம் நிகழ்ந்தது.

பட படவென துப்பாக்கிச் சூடு பொழியத்துவங்கிற்று: காலுக்குள்ளும் கைக்குள்ளும் ரவைகள் கூவிக் கொண்டு பறந்தன. செந்தமிழன் ''அப்பா'.வென தலை பிளக்க, மூக்கையாவின் காலடியில் சரிந்தான்.

துப்பாக்கிகளையும் ரவைக் கூடுத் தாங்கியையும் செந்தமிழனிடமிருந்து பிடுங்கியதும், அந்த இடத்தில் இருந்து நாலு பாய்ச்சலில் அவர் பாய்ந்து மறைந்ததும் வினாடிக்கணக்கில் நடந்தவைகள்.

ராணுவம் அந்த இடத்தில் அதிகம் சுணங்கவில்லை. சுணங்கவும், துணிவுமில்லை- சடலத்லைப் பழிவாங்குவது சிங்கள ராணுவ மரபாயிற்றே- செய்துவிட்டு நகர்ந்துவிட்டது ராணுவம்-

சம்பவம் நடந்து அரை மணித்தியாலயம் இருக்கும்- மூக்கையாவால் இனியும் நடக்கமுடியவில்லை- நாக்கு வரண்டு தாகமெடுத்தது- ஒரு சிறிய ஓடையருகில் மெதுவாக இருந்தார் - வலதுகால் தொடையிலும், முதுகிலும் ரவைகள்பெரிதாகதுளைபோட்டிருந்தன- எந்தத் திசையில் வந்து எவ்விடத்தில் இருக்கிறார் என்று அவருக்கே தெரியாத பிரமை-

.........அழுகைதான் வந்தது அவருக்கு- அழுதார்- மேலும் அழுதார், மனச்சுமைகளைக் கொட்டித் தீர்ப்பது போல் அழுதார்- நீண்டகாலத்துக்குப் பிறகு இப்படி அழுகிறார்- சிறு வயதில் அவர் அப்பா, கங்காணி காமினிக்கு எதற்கோ கையெறிந்தபோது லயத்தில் அன்று நடந்த கோரச் சம்பவத்தை கண்ணுற்று' இப்படி அழுதது நினைவுக்கு வந்தது-

ஏற்கனவே அதிக ரத்தம் வெளியேறிவிட்டது- வலியெடுத்தது- வேதனைப்பட்டார் வலித்ததற்காகவல்ல, இவ்வளவு காலத்திற்கு இருந்தும் துப்பாக்கி சுடக்கற்றுக்கொள்ளவில்லையே என்பதற்காக. முந்தநாள்கூட, ஒரு சிறிய போராளியிடம், ''நானுந்தா ஒங்கமாதிரி ஆமிய சுடு வேண்டா'' என்று கூறியதை நினைத்துப்பார்த்தார், நிறையவே வேதனைப்பட்டார்-

அந்த இடத்தில் அப்படியே நின்று துப்பாக்கியை பிடுங்கி நேருக்கு நேரே, இரண்டு மூன்று ஆமியையாவது சுட்டு வீழ்த்திவிட்டு, அந்த பதினேழு வயதுகூட நிரம்பாத சிறுவனோடு தானும் செத்தி

(8ஆம் பக்கம் பார்க்க)

# குடியேறுவோர்களின் துஷ்பிரயோகங்களே புதிய கட்டுப்பாட்டிற்கு தூண்டுகோலாகிறது

ஐரோப்பிய நாடுகள் உட்பட உலகின் அனைத்துப் பகுதிகளிலும் இன்று தமிழர்கள் குடியேறி வாழ்கின்றனர். இவ்வாறான உலகளாவிய அகதிகள் குடியேற்றத்துக்கு உள்நாட்டில் நடைபெறும் மக்களின் புலம் பெயர்வு காரணமாக அமைகின்றது. இவ்வாறு புலம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் வழங்கி வரும் சலுகைகளிலும் சந்தர்ப்பங்களிலும் அண்மையில் பல கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. சம்பந்தப்பட்ட நாடுகளில் குடியேறி வாழும் தமிழர்களின் நடத்தைகளும், துஷ்பிரயோகங்களும் இந்நாட்டு அரசுகள் அமுலாக்கும் புதிய கட்டுப்பாடுகளுக்கு தூண்டுகோலாக அமைந்துள்ளன.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில்ஒன்றாகிய ஜேர்மன் நாட்டில் வெளிநாட்டவர் தொடர்பாக அண்மைக்காலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுவரும் புதியகட்டுப்பாடுகள்குறித்தும் இதற்கான காரணங்கள் குறித்தும்இந்தநாட்டின் குடிவரவு குடியகல்வுத்திணைக்களத்தில் பிரதம மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றும் திரு. கே-சரவணபவன் பலதகவல்களைத் தெரிவித்தார். கடந்த 17வருடங்களாக ஜெர்மனியில் கடமையாற்றிவரும் இவர் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிறந்த தமிழ் அறிஞரான இவர் ஜேர்மன் மொழியில் சிறந்த தேர்ச்சி பெற்றவர்,

### அரசின் சலுகைகள்:-

1992-ம்ஆண்டுஜூன் மாதம் வரை ஜேர்மன் நாட்டுக்குள் இலங்கையர் பலர் நினைத்த மாதிரி வந்து நுழைந்து கொண்டனர்- குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு கட்டுப்பாடுகள் எதுவுமே இருக்கவில்லை புதிதாக நாட்டுக்குள் வந்திறங்குபவர்களுக்கும்ஏற்கனவே வந்து விட்டவர்களுக்கும் ஜேர்மன் அரசு பல சலுகைகளையும் சந்தர்ப்பங்களையும் அள்ளி வீசியது. இவ்வாறான வாறு தங்க வைக்கப்படுபவர்களைஅரசுசும்மாவிடவில்லை- அனைவரும் அரச விருந்தாளிகள் போல் கவனிக்கப்பட்டனர். நேரம் தவறாமல் இலவசமாக உணவு வழங்கப்பட்டது. இருப்பிட வசதி இலவசம். இவற்றைவிட சிறு சிறு செலவுகளைக்கவனிப்பதற்கும் 'பொக்கட்மணி' என்ற பெயரில் பணம் வழங்கப்பட்டு வந்தது-

### தொழில் வாய்ப்புக்கள்:-

இவ்வாறு தங்கியிருப்பவர்களது தனிப்பட்ட முயற்சியும்

> **ஜேர்மனியில் தமிழரின் இன்றைய நிலை குறித்துமொழிபெயர்ப்பாளர்சரவணபவன்**

அரசின் சலுகைகளை தமிழர்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டனர். அதற்கும் மேலாக இவ்வாறான சலுகைக்ளை துஷ்பிரயோகம் செய்யவும் நம்மவர் தயக்கம் காட்டவில்லை.

எப்படியாயினும் ஜேர்மன் விமான நிலையத்தில் வந்திறங்கும் தமிழர்களில் 16 வயதுக்குட்பட்டவராயின் பிரதான அகதி முகாம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டனர். 16வயதுக்கு மேற்பட்டவர்கள் வேறொரு அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டனர். இவ்

இவர்களுக்குக் கிடைக்கும் ஏனைய உதவிகளையும் பொறுத்து இவர்களது தொழில் வாய்ப்பு அமையும். ஜேர்மன் மொழியைப் பயின்று கொண்டால் தொழில் வாய்ப்பு அல்லது இவர்களது கல்வி வளர்ச்சிக்கு பெரும் துணையாக இருக்கும் என்று திரு-சரவணபவன் தெரிவித்தார்-தொழில் வாய்ப்புக்கள் குறித்து அவர் மேலும்தெரிவிக்கையில் இலங்கையில் இருந்து டாக்டர்களாகவும் பொறியியலாளராகவும் பட்டம் பெற்று விட்டு ஜேர்மன் நாட்டுக்கு வந்தால் அங்கே இதேதொழில்களைச் செய்ய முடியாது- அந்தநாட்டில் இத்துறைகளில் மீண்டும் படித்துப் பட்டம் பெற்றுக் கொள்ளவேண்டும்- அல்லாவிட்டால் சாதாரணமாக பெற்றோல் செட்டில் நின்று வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பும் வேலை போன்ற தொழில்களையே செய்ய முடியும். இவ்வாறான தொழில்களில் நம் நாட்டைச் சேர்ந்த பல டாக்டர்களும் பொறியியலாளர்களும் தற்போது கடமை புரிகின்றனர்- இலங்கையில் டாக்டராக இருந்து பெறும் சம்பளத்தை விட அதிக சம்பளம் கிடைக்கிறது என்ற திருப்தியுடன் நம்நாட்டைச்சேர்ந்த பல டாக்டர்களும் பொறியியலாளர்களும் தமது காலத்தைக் கழிக்கின்றனர்-

### கட்டுப்பாடுகள் ஏன்?

அதேவேளை தற்போது ஜேர்மன் அரசினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுவரும் கட்டுப்பாடுகளுக்கான காரணம் குறித்தும் திரு- சரவணபவன் விளக்கம் தந்தார்- அரசு வழங்கும் சந்தர்ப்பங்களையும் சலுகைகளையும் நம்மவர்கள் கண்டபடி துஷ்பிரயோகம் செய்வதே அரசு புதிய கட்டுப்பாடுகளை விதித்து வருவதற்கான பிரதான காரணம் என்றார்- கள்ளத்தனமான கடவுச்சீட்டுடன் நாட்டுக்குள் நுழைதல். கடவுச்சீட்டில்ஒட்டப்பட்டிருக்கும் ஒருவரின் புகைப்படத்திற்குப்பதிலாக வேறொருவரது புகைப்படத்தை ஒட்டிப் பாவித்தல், ஏற்க முடியாத காரணத்தைக்கூறி நாட்டுக்குள் நுழைதல்-இவ்வாறு நம்மவர்கள் மேற்கொள்ளும் துஷ்பிரயோகங்கள் குறித்து நீண்ட பட்டியலைப் போட்டார்-

பல்வேறு வழிகளைப் பயன்படுத்தி கள்ளத்தனமாக நாட்டுக்குள் நுழைபவர்களைக்கூட அரசசலுகைஅடிப்படையில் மேற்கூறப்பட்டபடி அகதிமுகாமில் தங்க வைத்து அவர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுக்கிறது-

எப்படியோ ஜேர்மன் நாட்டுக்குள் நுழையும் நம்மவர்களில் பலர் மேற்கத்தைய நாகரிக உலகுடன் தம்மையும் இணைத்துக்கொண்டு மது, மாது, கிளப் என்று நாடு பூராகவும் உல்லாசமாகத் திரிபவர்களும் உண்டு இதற்காக அரசுவழங்கும் சலுகைகளைத் துஷ்பிரயோகம் செய்பவர்களும் தாராளமாக உள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்

---

## ஒரு நோக்கு

# நிலா தமிழின்தாசனின் 'புலர்வு'

## (கவிதைத்தொகுதி)

கவிஞர் நிலா தமிழின் தாசன் அவர்களின் இரண்டாவது கவிதைத் தொகுதியாக 'புலர்வு' வெளிவந்துள்ளது. 1979 ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை எழுதப்பட்ட 42 கவிதைகள் இததொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தேசியப் பரப்பில் மிகப்பிரபல்யமான பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரமான பல கவிதைகளோடு, பரிசுபெற்ற கவிதைகளும் இத் தொகுப்பில் உள்ளடங்கியுள்ளன- அண்மையில் 'நாளை' என்ற இவரது இன்னொரு கவிதைத் தொகுதி வெளியானதும் கருத்திற் கொள்ள வேண்டிய விடயமாகும்- இவ்வளவு ஆக்க திறன் மிக்க கவிஞர் நிலாதமிழின் தாசன் அவர்கள் இவ்வளவு, காலமும் இலைமறை காயாக இருந்தது கவலைக்குரிய தொன்றாகும்-

திருகோணமலை - நிலாவெளியைச் சேர்ந்த இவர் இரு கவிதைத்தொகுதிகளை வெளியிட்டு, கவிதை இலக்கியத்தில் 'முத்திரை' பதித்திருப்பது. புலம்பெயர்விலுள்ள துன்பத்துள் - ஒரு பெரும் சாதனையை உள்ளடக்கிய இன்பமாக அமைகின்றது. உதிரிகளாக இருந்த இவரது கவிதைகள் தொகுக்கப்பட்டதன் பின் பலரது கவனத்தையும் ஈர்த்து கவிதை இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவர்களின் பட்டியலில் இவரையும் இணைத்துள்ளது-

இக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 42 கவிதைகளில், 15 கவிதைகள் சமகால நிகழ்வுகளை அடிநாதமாகக் கொண்டு அமைந்துள்ளன- ஏனைய 27கவிதைகளும் தேசியத்தின் பல பிரச்சினைகளைத் தொட்டு நிற்கின்றன. தொண்ணூறுவீதமான கவிதைகளில் ஏக்க உணர்வுகளே உள்ளடங்கியுள்ளன-இந்த ஏக்க உணர்வுகளும், பொதுவானதொரு சுபீட்ச அமைப்பை' அவாவி நிற்பதையும் உணரமுடிகின்றது.

எந்தக் கவிஞனுக்கும் அவனுக்கென்று சில கொள்கைகள் இருக்கவே செய்யும். அக்கொள்கைகள், தேசிய, சமுதாய நடவடிக்கைகள் மூலம் பெறுகின்ற பலம் - பலவீனம் ஆகிய இரண்டு நிலைகளையும் பொறுத்தே கவிஞரின் வளர்ச்சி நிலை தீர்மானிக்கப்படுகி

**கே. ஆர்.டேவிட்**

றது. கவிஞர் நிலா தமிழின் தாசன் அவர்கள் 'மிகத்துணிகரமாக'த் தனது கொள்கையினைத் தனது கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளதை - அவரது கவிதைத் தொகுதியில் அவதானிக்கமுடிகின்றது. 'தீயென எழுவாய்' 'பெண்ணென்ன சடப்பொருளா' 'நிலவுகள் தேயலாமோ' 'கனிவு', 'மெழுகுவர்த்தி', 'ஓ......வையகமே', 'மேதினிநிமிரும்மேதினம்', என்பனபோன்றகவிதைகளின் கருப்பொருள்கள், உருவநிலையில் வேறுபட்டிருப்பினும் உணர்வு நிலையில் ஒரு 'பொதுமையை' வெளிக்காட்டுகின்றன- இவரது அநேக கவிதைகள் தேசிய பரப்பினைத் தொட்டு நிற்பதனாலேயே, அவைகள் தசையும், நரம்புமுள்ளஆரோக்கியமான கனதியுள்ள பிரசவங்களாக அமைந்தன என்று கூறலாம்-

பாரதி, பாரதிதாசன், காசிஆனந்தன், மகாகவி, சுபத்திரன், புதுவை இரத்தினதுரை, வாஞ்சிநாதன் போன்றோரின் கவிதைகளிலுள்ள கவிவளத்தை தொட்டு நிற்கும் 'அதிவேகமானதொரு' கவிதைவளர்ச்சியினை இவரது கவிதைகளில் காணக்கூடியதாக உள்ளது.

பாரதியிலிருந்து இன்றுவரை சகல கவிஞர்களும் கவிதை இலக்கியத்தில் பெண்களுக்குத் தனியிடம் வழங்கி வந்திருக்கின்றனர். இவரது கவிதைத்தொகுப்பில்'மெழுகுவர்த்தி' என்ற கவிதையில்

''கொண்டவனின் குணமறிந்து வாழும் நல்ல
குணமுள்ள மனைவியொரு
மெழுகுவர்த்தி''

என்று கூறி குடும்பப் பெண்கள் மீது இரக்கப்பட்டு, அவர்களைத் தியாகிகளாக்கிய கவிஞர் இன்னொரு இடத்தில்,

''விடியத்தான்போகிறது...
ஏனெனில்
பிஞ்சுக் குஞ்சுகள் மட்டுமல்ல
பெட்டைக் கோழிகளும்
பெருங்குரலில் கூவ
ஆரம்பித்து விட்டன!''

என்று கூறி போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பைக் கௌரவிக்கின்றார்- அத்தோடு தமிழீழப் போராட்டத்தின் எதிர்காலம் பற்றி தீர்க்கதரிசனமும் செய்கின்றார்- இதில் 'பெட்டைக் கோழிகள்' என்ற சொல்லைக் கவிஞர் பாவித்திருப்பது இக்கவிதைக்கு புறம்பானதொரு கனதியைச்சேர்க்கின்றது.

பாரதியும் பாரதியின் கவிதைகளும் நிலைத்து வாழ்வதற்கு மூன்று முக்கிய காரணங்களைக் கூறலாம்- ஒன்று பாரதிவாழ்ந்த காலம், இரண்டாவது பாரதி தெரிவு செய்த கருவூலங்கள், மூன்றாவது சொல்வளம். சொல்வளம் என்று கூறும்போது எவருக்குமே விளங்கக்கூடிய வகையில் அவன் பாடியுள்ளான். அந்த பாரதியோடு ஒத்துப் போகக் கூடிய ஒத்துப்பார்க்கக்கூடிய, சில தகுதிகளை கவிஞர் நிலா தமிழின் தாசன் கொண்டுள்ளார்.

''ஓ...வையகமே'' என்ற கவிதைத் தொடரில் பல உலகப் பெரியார்களின் முடிவுகளை இரத்தினச்சுருக்கமாகக் கூறுகின்றார்.

''யேசுவுக்குச் சிலுவை
தந்தாய்
நாயகராம் நபியின் மேல்
கல்லெறிந்தாய்
துடிதுடித்த ஞானிக்கு
(சோக்கிரட்டீஸ்) விடமளித்
தாய்
நெஞ்சுக்குத் துப்பாக்கிக்
குண்டு ஈந்தாய்(காந்தி)

இப்படியே கவிதை நீண்டு செல்கின்றது. அனைத்துப் பெரியார்களின் முடிவுகளையும்ஒரே பார்வையில் பார்க்கின்ற- அவைகளைப் பற்றிச் சிந்திக்கின்ற ஒரு சந்தர்ப்பத்தைக் கவிஞர் ஏற்படுத்தியிருப்பது நிலா தமிழின் தாசனை ஒரு சிறந்த கவிஞன்' என்று வாசகர்களால் நாக்குப்புரளாமல் கூறமுடிகின்றது.

அட்டைப் படம்பற்றிச் சிறிது கூறவேண்டும், பெருமளவு சாதாரண வாசகர்களையேநோக்கிப் படைக்கப்பட்ட இக் கவிதைத்தொகுதிக்கு இலகுவானதொரு அட்டைப் படத்தைப்போட்டிருக்கலாம். அத்தோடு 'புலர்வு' என்ற வரிவடிவம், தலைவால் இன்றி வெறும் முண்டங்கள் போல் அமைந்திருப்பதும் மிகவும் வேதனையைத் தருகின்றது' ஓவியத்தில் பிழை எதுவும் இல்லை- அந்த ஓவியம் அமைந்திருக்கும் இடந்தான் பொருத்தமில்லாதது.


**பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை**

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர்சங்கம், சங்க எல்லைக்குள் இரவு பாதுகாப்புச் சேவை நடாத்துவதற்கு ஆட்களைசேர்ப்பதற்கு வர்த்தகசங்க எல்லைக்குள் வதியும் ஆண்பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோருகின்றது. மேலதிக விபரங்களை சங்க காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும் 1994 - 04 - 05 ஆம் திகதி வரைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும்.

கைத்தொழில் வர்த்தகர் சங்கம்
தனங்கிளப்பு வீதி,
சாவகச்சேரி.

(இ-8951)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,

**யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்**

## யாழ். கிளை மன்றம்
## 1994 வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கான அறிவித்தல்

மேற்படி பொதுக்கூட்டம் 29-05-94 (ஞாயிற்றுக் கிழமை) முற்பகல் 9.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். கிளையின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 30 அங்கத்துவப் பிரதிநிதிகள் (இவர்களில் யாரும் வராதவிடத்து அவர்களுக்காக நியமிக்கப்படும் பிரதிநிதிகள்) மாத்திரமே இக்கூட்டத்தில் பங்குபற்றலாம்.

இவர்கள் 1994க்கான அங்கத்துவப் பணத்தைச் செலுத்தியவர்களாக இருத்தல் வேண்டும். இப் பிரதிநிதிகள் பெயர்களையும்: பிரேரணைகளையும் பிரிவுத் தலைவர்- செயலாளர் 01-05-94க்கு முன்பாக எமக்கு அனுப்பி வைக்கவும்,

78, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்
30-03-94

கௌரவ செயலாளர்

(இ-8952)

---

# பேராதனைப் பல்கலைக்கழக (வெளிவாரி) பட்டப்படிப்புகள்

**கலைமாணி (B.A.)**

**விஞ்ஞானமாணி (B.Sc) புள்ளிவிபரவியல்**

க. பொ. த. உயர்தரம் பரீட்சையில் 180 புள்ளிகளைப் பெற்றவர்கள் கலைமாணிப் பட்டப் படிப்புகளுக்கு பதிவு செய்து கொள்ளலாம் அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை உடன் பெற்று பதிவு செய்து கொள்ளவும்.

விபரங்களுக்கு

148/1, இராவ்லி வீதி, யாழ்ப்பாணம்.

உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி,

(இ-8958)

---

# ஈடற்ற இழப்பு

அமரர்

## மாப்பாணப்பிள்ளை நித்தியானந்தசிவம்

"உலகில் நீயும் வாழ்ந்த காலம்
உயர்ந்த வாழ்வின் பயணமே"

கடமை வீரனாகவும், கண்ணியத்தின் காவலனாகவும் கட்டுப்பாட்டின் செம்மலாகவும் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக பொறுப்புள்ள உத்தியோகத்தராக எமது சபைக்கு அரும்பணி ஆற்றி இன்று எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு பிரிந்து அமரராகி விட்டார்

எமது சாலையில் கடந்த பதினைந்து வருடங்களாக கடமை புரிந்து தமது உயர் அதிகாரிகளிடமும் ஊழியர்களிடமுமிருந்தும் நன் மதிப்பைப் பெற்ற சிறந்த உத்தியோகத்தரானவர்; ஊழியர்களைத் தராதரம் பாராட்டாது அவர்களின் குறைநிறைகளை கேட்டறிந்து செயலாற்றி முகாமைக்கு உறுதுணையாக விளங்கினார்; அண்மையிலும் வெளிநாட்டிலிருந்து வந்து எமது சாலையில் கடமையைப் பொறுப்பேற்ற தன் பின்னர் பல வருடங்களாக வழங்கப்படாமல் இருந்த ஊழியர்களது வருடாந்த சம்பள உயர்வு நிலுவைகளை பெற்றுக் கொடுப்பதற்குத் தீவிரமாகப் பாடுபட்டார்.

தொழிலாளரின் பேராதரவைப் பெற்ற இவர் எமது சாலையின் தமிழ்பேசும் போக்குவரத்து ஊழியர் சங்க நிர்வாகசபை உறுப்பினராக இருந்து தொழிலாளர்களின் நலனுக்கு அயராது பாடுபட்டார்.

குழந்தை உள்ளம் கொண்ட இவர் என்றும் எவரையும் மனதாலோ வாக்காலோ புண்படுத்தாத சிறந்த பண்பாளர். சகலருடனும் அன்பாகவும் இனிமையாகவும் என்றுமே இன்முகத்துடன் பழகும் நற்பாங்குடையவர். மது, புகைத்தல் போன்ற எவ்வித தீய பழக்கங்களுமே இல்லாத இவரைக் கண்டு ஜெர்மனியர் வியப்புற்றனர்.

இப்பேற்பட்ட ஒரு சிறந்த ஒழுக்கசீலனை, நண்பனை இழந்து தவிக்கின்றது எமது ஊழியர் சமூகம். ஈடு செய்ய முடியாதது இந்த இழப்பு,

இவரின் பிரிவால் ஏங்கி நிற்கும் மனைவி, மகன் மற்றும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்;

ஆ. கந்தையா
இ.பி.போ.ச. சாலை முகாமையாளரும்
பருத்தித்துறைச்சாலை
தமிழ்பேசும் போக்குவரத்து
ஊழியர் சங்கமும் சாலை ஊழியர்களும்

(7888)

---

மூக்கையா

ருக்கவேண்டுமென்று எண்ணியெண்ணி மிகவும் வருந்தினார்-

ஆபத்து நேர்ந்த வேளையில் ஆயுதத்தைக் காப்பாற்றுகின்ற அவங்களின் தார்மீகக் கொள்கை, எப்படி தன்னைப் பற்றிக்கொண்டது ......,- இதுவும் அவருக்குத் தெரியாமலேயே அவர் போராளிகளிடம் பழகிக்கொண்ட இச்சை செயல்களில் ஒன்று. இது இச்சையின்றிய செயலன்று-

மாலையாகிக்கொண்டிருந்தது. மனித அரவமற்ற ஒரு லந்துக்காடது. உடல் நடுங்கி வந்தது. கண் இருட்டிய து-மூக்கையா துப்பாக்கியை ஒரு தரம் உற்றுப்பார்த்தார்-ரவைக் கூடுத்தாங்கிக்குள் சிவப்பாக ஏதோ தெரிந்தது-மெதுவாக கைபோட்டு இழுத்தார், சிவப்புகறுப்பு நூல்களில் குப்பி தகடு- தகடு மின்னியது அ:3124- மூக்கையாவிற்கு செந்தமிழனின் முகம் ஒரு தரம் வந்துபோனது- குப்பியைஎடுத்து முத்தமிட்டார்-கடைசி நேரத்து நண்பன் அதுசீ...இல்லை கடவுள்-

கடைசி நேரம், தோட்டம் ......லயம்...... எல்லாம் கண் முன்னே வந்து நின்றன-

நண்பன் முனியாண்டி தன் சாவுச் செய்தியை அறிந்ததும் மிகவும் வேதனைப்படுவான்... இல்லை இல்லை- நிஜமாக அவன் வேதனைப்படமாட்டான்- அதற்கு அவன் எழுதும் ஒவ்வொரு கடிதமும் தான் சான்று- முனியாண்டி, இந்தச் சாவை அறிந்து உண்மையிலேயே சந்தோசப்படுவான்; பெருமைப்படுவான்-மூக்கையா சிரித்தார்- தனது மூன்று பிள்ளைகள் வீழ்ந்த மண்ணில் தானும் சாவதையெண்ணி பெருமையடைந்தார்-

மெதுவாக அந்த புழுதி மண்ணில் சாய்ந்து சிவப்பு நூலை உருவி மறமறவெனக் கடித்துக்கொண்டார், மலையகம் தந்த ராமையா மூக்கையா-

---

# உங்களது தேவை இவ்வாறானதா?

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன புள்ளிவிபரக் கிளை இவ்வாண்டு முதல் தனது செயற்பாடுகளை பாரிய அளவில் விரிவுபடுத்தியுள்ளது இதன்படி உங்களுக்குத் தேவையான

(1) குறிப்பிட்ட கிராமத்தின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டவர்களுக்கு அக்கிராமம் பற்றிய ஆய்வுகளையோ

(2) குறிப்பிட்ட சமூகம் பற்றிய ஆய்வுகளையோ

(3) குறிப்பிட்ட உற்பத்திப் பொருட்களிற்கான நுகர்வோர் மட்டத்தில் உள்ள திருப்தியின் அளவு பற்றிய ஆய்வுகளையோ

மேற்கொள்ள விரும்பும் உங்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கவோ அல்லது அவை பற்றிய பூரண ஆய்வு செய்து ஆய்வறிக்கைகளை வழங்கவோ, பல்லாண்டு காலம் இத்துறையில் சேவையாற்றிய ஆலோசகர்களுடன் தயாராக உள்ளனர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு புள்ளிவிபரக் கிளையினர்.

அது மட்டுமன்றி

**ஆய்வறிக்கைகளை எழுதும் ஆய்வாளர்கள்**

**பல்கலைக்கழக மாணவர்கள்**

**பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள்**

போன்றவர்களுக்கு தேவையான புள்ளி விபரங்களை வழங்கி வருவதுடன் அரச, அரச சார்பற்ற, சமூக சேவை அமைப்புகளுக்குத் தேவையான ஆய்வறிக்கைகளைத் தயாரித்து வழங்கவும் தயாராய் உள்ளனர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் புள்ளி விபரக் கிளையினர்.

மேலதிக விபரங்கட்கு

புள்ளி விபரக் கிளை,

**தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனம்**

தாவடி

எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

(இ-8965)

---

# வாழ்த்துகின்றோம்



நாளைய தினம் பவள விழாக் காணும்

செந்தமிழ்ச் செல்வர்

## பண்டிதர் க. மயில்வாகனனார்

செந்தமிழ்ச் செல்வர் பண்டிதர் க. மயில்வாகனனார் 75ஆம் வயதை அடையும் வேளையில் அவர் தொடர்பான மலர் வெளியீட்டுடன் பாராட்டு விழாவையும் நடத்த, வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கம் தீர்மானித்ததையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். வாழ்த்துகின்றோம்.

ஏதாவது ஒரு இலட்சியம் ஒரு குறிக்கோள் ஒரு வாழ்க்கைத்திட்டம் இவற்றோடு வாழ்கின்றவர்கள் ஒரு சிலர்தான். பண்டிதர் ஐயா அவர்கள் இவர்களில் ஒருவர். இவர் நாவன்மை நிறைந்த பேச்சாளர்; புலமை பொலியும் கவிஞர்; எளிமையும் இனிமையும் கருத்தாழமும் கொண்ட தமிழ் வசன நடையாளர்; இலக்கணத்தைக் கற்றுத்துறைபோகியவர்; இலக்கியங்களுள் தோய்ந்து மகிழ்பவர், மகிழ்விப்பவர் இத்தமிழ்ப் பண்டிதப் பெருந்தகை.

ஆறஅமரச்சிந்தித்து. அறுத்துஉறுத்துவெளிப்படுத்திக்கேட்பவர்; படிப்பவர்; நினைப்பவர் யாவரின் உள்ளார்வத்தையும் தூண்டி, அறிவு வளத்தைப் பெருக்கி, தாம் செல்லுமிடங்களிலெல்லாம் நன்மாணாக்கர்களை உருவாக்கி வருபவர்.

ஆசிரியராய் இருந்த காலம் தொடக்கம் பல கல்வி வெளியீட்டு நிறுவனங்களுக்குப் பாட நூல்கள் எழுதி மாணவர் சமுதாயத்திற்குப் பெரும் தொண்டு செய்தவர். எமது கு. வி. அச்சகம், அச்சுத்துறை, பதிப்புத்துறை நிறுவனங்களில் கடந்த 25 வருடங்களுக்குமேல் உடன் இருந்து துணை புரிந்து வருபவர்; சிறந்த பாட நூல்களையும் பயிற்சிகளையும் உருவாக்க உறுதுணையாக இருந்தவர். சைவத் தமிழ் நூல்களைப் பிழையற வெளிக்கொணர உதவியவர்.

ஒழுக்க சீலர்; பயனுறுத்தும் பண்பாளர்; அவரது தமிழ் நடைபோலவே வாழ்வு நடையும் எளிமை இனிமையும் நிறைந்தது; அவரது தமிழ்ப்பணி, சமயப் பணி, சமூகப் பணி தொடர பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்,

கு. வி. அச்சகம்
பாடநூல் வெளியீட்டு நிறுவனம்
யாழ்ப்பாணம்

(7886)

# சபாநாயகர் யாழ் விஜயம் ஒத்திவைப்பு; சமாதானத்தின் கைதியாக அரசு விரும்பவில்லை

வெண்ணெய் திரண்டு வரும் போது தாளியை உடைத்தால்போல் சபாநாயகர் எம் எச், முகமதுவின் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா முறித்துவிட்டார் டி' பி. விஜேதுங்காவின் இந்நடவடிக்கையை இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வு முயற்சி ஒன்றை முறித்ததாகக் கொள்வதில் தவறு ஏதும் இருக்கப் போவதில்லை,

ஜனநாயக மரபில் 'மக்கள் தீர்ப்பு மகேசன் தீர்ப்பு' எனக் கூறப்படுவதுண்டு. இத்தீர்ப்பானது பொதுவாக தேர்தல்களின் மூலமே வழங்கப்படுவதுண்டு. இந்த வகையில் அண்மையில் தென்மாகாண சபைக்கு இடம்பெற்ற தேர்தலில் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் கொள்கைகள் மக்களால் நிராகரிக்கப்பட்டன, அதன் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில்தீர்வுகாண்பதையே மக்கள் விரும்புவது தெளிவுபடுத்தப்பட்டது.

ஆனால் டி.பி. விஜேதுங்காவும், ஐக்கிய தேசியக் கட்சியும் 'மக்கள் கொடுத்துள்ள தீர்ப்பை தலைவணங்கி ஏற்கிறோம்' எனக் கூறிக் கொண்டாலும் அதற்கேற்ப நடக்க முற்படுவதாக இல்லை. ஆனால் சிறிலங்கா அரசியல் வரலாற்றில் அவ்வாறானதொன்று நிகழ்வது ஆச்சரியம் கொடுக்கக் கூடிய விடயம் ஒன்றல்ல,

இனப்பிரச்சினை விடயத்தில் டி.பி விஜேதுங்கா எப்பொழுதுமே சமாதானத்திற்கான சமிக்ஞைகளைக் காட்டவில்லை. இவ்விவகாரத்தை ஒரு பயங்கரவாதப் பிரச்சினை என்ற ரீதியில் இதற்கு இராணுவத்தீர்வே ஒரே மார்க்கம் என்பதுமே அவரது வெளிப்பாடாக இருந்தது. இதில் டி. பி. விஜேதுங்கா ஒளிவு மறைவு கொண்டிருக்கவில்லை,

இவ்விடயத்தில் ஒரு தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்பது சாத்தியமாகாது என்பதை விட பௌத்த- சிங்கள மேலாதிக்கம் என்பது அவர் சிந்தையில் ஆழமாகப் பதிந்திருந்தமையே இவ்வாறானதொரு நிலைப்பாட்டைக் கொள்வதற்குக் காரணமாகும்-

ஆகையினால் சமாதானத்திற்கான முயற்சிகள் எதிலும் டி.பி, விஜேதுங்காவோ, அவரது அரசாங்கமோ முனைப்பான முயற்சிகளையோ, ஊக்குவிப்புக்களையோ வழங்கவில்லை- டி-பி- விஜேதுங்காவின் நிலைப்பாடானது தெளிவானதாக இருந்த வேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் இதனை ஏற்றுக்கொண்டாலும், இடைக்கிடை நிபந்தனைகளுடன் கூடிய சமாதானப் பேச்சுகள் பற்றிப் பேசினார்,

இந்நிலையில் அரசாங்கம் இனப்பிரச்சினை குறித்துதெளிவானகொள்கைகொண்டிருக்கவில்லைஎன அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்டனர் ஆனால் உண்மையில் அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பாகத் தெளிவான கொள்கை ஒன்றைக் கொண்டே இருந்தது'. பிரதமர் ரணில் தணிந்த குரலில் சமாதானம் பற்றிப் பேசிய பேச்சுகள் சமாதானம் உருவாவதற்குப் போதுமானதாக இல்லை அது ஒரு அரசியல் தந்திரமே ஆகும்;

ஏனெனில் நிபந்தனையுடன்கூடிய சமாதானப் பேச்சுக்கள் என்பது எப்பொழுதும் சாத்தியமாகப் போவதில்லை. அதிலும் ஆயுதங்களைக் கீழே வைத்தல் என்பது பாதுகாப்பை எதிரிகளிடமே ஒப்படைக்கும் செயலுக்கு ஒப்பானதாகும் இதனை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்பே இருக்கும் என ஒரு போதும் எவரும் எதிர்பார்க்க முடியாது;

இதேவேளை கடந்த ஆண்டின் இறுதியில் இராணுவத்திற்கு ஏற்பட்ட தொடர்ச்சியான தோல்விகள் இராணுவக் கட்டமைப்பையே சிதைத்தது. இந்நிலையில் தொடர்ந்தும் போரில் ஈடுபடத் தேவையான மனோ பலத்தை இராணுவத்தினருக்கு வளர்ப்பதுடன் இராணுவக் கட்டமைப்பை சீரமைக்கவேண்டிய அவசியமும் அரசாங்கத்திற்கு இருந்தது- அத்தோடு பெருந் தொகை ஆயுதத்தையும் இறக்குமதி செய்யவேண்டிய நிலையும் இருந்தது-

இந்நிலையில் இராணுவத்திற்கு யுத்தத்தைத் தொடர்வதற்குச் சில மாத கால அவகாசம் தேவையானதொன்றாக இருந்தது- இந்நிலையிலேயே இவ்வருட ஆரம்பத்தில் சமாதான, நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் வடக்கே சென்றுவர அரசாங்கம் அனுமதி அளித்திருந்தது-

ஆனால் மேற்கொள்ளப்பட்ட எந்த நல்லெண்ண முயற்சிகளுக்கும் அரசாங்கம்ஆக்கபூர்வமான பதிலைக்கொடுக்கவில்லை. ஒருவகையில் அவற்றை புறக்கணித்தே வந்தது- ஆனால் அவை குறித்து கருத்து வெளியிட்டு அரசிற்கு எதிரான அபிப்பிராயம் உருவாவதை தவிர்ப்பதற்காக மௌனமாகவே இருந்தது;

இதேசமயம், அரசாங்கத்தின் மௌனம் ஓரளவு தவறான கற்பிதத்தைக் கொடுத்தது சமாதான முயற்சிகளுக்கு ஊக்கம் கொடுக்கும் நடவடிக்கையாகக் கொள்ளப்பட்டது. இந்த நிலையில் சில மேற்கத்தைய நாடுகளில் இருந்தும் அரசு சார்ந்த' அரசு சாராத நல்லெண்ண முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன இந்த வகையில் நோர்வே அரசாங்கம் நேரடியாகவும் கனடாவில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல அமைப்புக்களும் பிரஜைகளும் ஈடுபட முனைந்தனர்,

ஆனால் டி. பி விஜேதுங்கா அவற்றைவெளிப்படையாகவேநிராகரித்துவிட்டார்,வெளிநாட்டுச்சமாதானமுயற்சிகள் எவையும் எமக்குத் தேவையில்லை எனக் குறிப்பிட்டார், கனடாவில் இருந்து எடுக்கப்பட்ட முயற்சிக்கு முதலில் உங்கள் நாட்டில் உள்ள 'கியூபெக்' பிரச்சினைக்குத்தீர்வுகண்டு விட்டு பின்னர் வேறு விடயங்களைப் பாருங்கள்எனப் காட்டமாகவே பதில் இருந்தது, கனடாவிற்கு கிடைத்த பதிலைத் தொடர்ந்து நோர்வே சற்று தயங்கியிருக்கக் கூடும் என்றே எண்ண வைக்கிறது, ஏனெனில் சமாதான முயற்சிகளை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வர புலிகள் அனுமதித்த பின்னரும் நோர்வே தரப்பினர் அடுத்த கட்ட நடவடிக்கைக்குப் போகாமை இவ்வாறு எண்ண வைக்கின்றது.

ஆனால் வெளிநாட்டவரின் சமாதான முயற்சிகளை காட்டமாக மறுத்த அரசாங்கம் உள்நாட்டில் உருவாகிய சமாதான முயற்சிகளை நிராகரிகக முடியாமல் மௌனமாக இருந்தது, இந்நிலையில் தான் சபாநாயகர் முகமதின் சமாதான முயற்சிக்கும் அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டியிருந்தது- அதாவது வெளிநாட்டவர் சமாதான முயற்சிகளை நிராகரித்த அதேவேளை வெளிநாட்டவரைத்திருப்திபடுத்தும்முயற்சியாக சபாநாயகர் முகமத்தை வடக்கே செல்ல அனுமதிக்கவே வேண்டியிருந்தது

இந்த நிலையில், தென்மாகாண சபைத்தேர்தலை தனது கொள்கைக்கான அங்கீகாரத்தைபெற்றுக்கொள்ள டிபி விஜேதுங்கா விரும்பினார். இதன் மூலம் மக்கள்அங்கீகாரம் பெறப்பட்டதாக அர்த்தப்படும் என அவர்எண்ணினார் இந்நிலையில் தென்மாகாண சபைத் தேர்தலில் பெறும் வெற்றி தனது பேரினவாதக் கொள்கைக்கும், தனது பத்துமாத கால ஆட்சிக்கும் கிடைக்கும் அங்கீகாரம் என்றே அவர் கருதினார்

அவரின் திட்டப்படி எதிர்பார்க்கப்பட்ட தேர்தல் வெற்றியின் பின்னர் உருவாகும் அரசியல்சூழ்நிலையில் இராணுவத்தீர்வுஎன்பது மக்களினால் அங்கீகரிக்கப்பட்டதாகவே இருக்கும்: இந் நிலையில் சபாநாயகர் முகமதின் விஜயம் எவ்வாறாக இருப்பினும் அரசாங்கத்தினால் அதை நிராகரிககவோ அன்றிக் கைவிடவோ முடியும். யுத்தத்திற்கு மக்கள் ஆணை வழங்கிவிட்டதாக கூறிக்கொள்ளவும், சமாதான முயற்சிகளைப் பின்தள்ளி விடுவதும் கஷ்டமான காரியமாக இருக்க மாட்டாது;

ஆனால் மக்களின் தீர்ப்பு மாறுபட்டதாக இருந்ததினால், டிபி விஜேதுங்காவினால் சில தினங்கள் இராணுவத்தீர்வு பற்றி மௌனம் சாதிக்க வேண்டிவந்தது- ஆனால் பாரிஸ் சென்றிருந்த சபாநாயகர் முகமத் கொழும்பு திரும்பி யாழ் செல்வதற்கு ஏற்பாடுகளை செய்தபோதுதான் டிபி விஜேதுங்கா அவருடன் பேசவேண்டி வந்தது

இப் பேச்சின்போது பயணத்தை ஒத்திவைக்குமாறு முகமத்திடம் கோரப்பட்டது- சபாநாயகர் முகமத் பாரிஸ் புறப்படுவதத்கு முன்னர் - அதாவது தென்மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் வெளிவர முன்னர்- அவரின் யாழ் விஜயத்திற்கு அரசாங்கம் பச்சைக்கொடி காட்டியிருந்தது- ஆனால் அதுவும் ஓரளவிற்கு நிபந்தனையுடன் கூடியதாகவே இருந்தது எனக் கொள்ளலாம்.

சபாநாயகர் முகமது கடந்த வருடத்தின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கான தனது விஜயம்பற்றிப்பேசத் தொடங்கியபோது விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தைச் சந்தித்து இனப்பிரச்சினைக்குத்தீர்வுபற்றிப்பேச போவதாக அறிவித்திருந்தார் இந்த வகையில் அன்று அவரிடம் ஒரு தீர்வு திட்டம் இருந்ததாகவே அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது

ஆனால் சபாநாயகரின் யாழ் விஜயம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டபோது அவரின் பேச்சின்தொனி சற்று மாறியிருந்தது யாழ்ப்பாணத்திற்கான பயணத்தில் சமாதானத்திற்கான அரசியற்சூழ்நிலைபற்றி அறிந்து வரப்போகிறேன் என்பதாக அவரது பேச்சுஇருந்தது

இதில்சபாநாயகர் முகமத்தின்பங்கு எந்தளவு என்று கூறமுடியாது விட்டாலும், அரசாங்கம் சபாநாயகர் ஒரு தீர்வு திட்டம் எதையும் முன்வைப்பதை அரசாங்கம் விரும்பவில்லை என்பதே உண்மையாகும்.

அரசாங்கம் இவ்வாறானதொரு நிலைப்பாட்டைக் கொள்வதற்கு முக்கிய காரணம், சபாநாயகர் முன்வைக்கும் தீர்வுத்திட்டம் எவையும் அரசாங்கத்தின் இராணுவ அணுகுமுறையில் பாதிப்பை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதே ஆகும். சபாநாயகர் ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்கும் பட்சத்தில் விடுதலைப் புலிகள் அதை ஏற்றுக் கொள்ளக் கூடும், அல்லது அதுகுறித்து பேச்சுக்களை நடத்தவும், அல்லது பரிசீலனை செய்யவும் கால அவகாசம் தேவைப்படும்;

இந்நிலையில், இதற்கான சந்தர்ப்பத்தை அரசாங்கம்வழங்காது போரை ஆரம்பிக்க முடியாது. அவ்வாறு ஆரம்பிப்பது என்பது வெளிப்படையாகவே அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வை நாடி நிற்பதை காட்டுவதாகவே இருக்கும். இந்நிலையிலேயே சமாதான சூழலைப் பற்றி அறிந்துவருதல் என்ற ரீதியில் மட்டும் சபாநாயகரின் பயணத்திற்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்க முன்வந்தது என்பதே உண்மையாகும்,

ஆனால், சமாதானம் குறித்த விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும் சமாதான சூழல் உருவாக்குதல் என்பதன் அவசியம் பற்றியும் சபாநாயகர் முகமது யாழ். வந்துதான்அறிந்து செல்லவேண்டும் என்பது அவசியமானதல்ல. ஏனெனில் இதற்கு முன்னர் பல நல்லெண்ண குழுக்கள் யாழ்ப்பாணம் வந்து இங்குள்ள சூழலை அறிந்து நேரடியாகவோ அன்றி வேறு வகையிலோ சிறிலங்காவின் ஜனாதிபதிக்கு அறிவித்தும் உள்ளன.,

சபாநாயகரின் பயணம் இவ்வாறு அர்த்தமில்லாததாகஆரம்பத்திலேயே அரசாங்கத்தினால் ஆக்கப்பட்டதாயினும்சிறிலங்காவிலுள்ள அதிஉயர் சபையின் தலைவர் என்ற ரீதியில் அவரின் பயணம் முதன்மை பெற்றதொன்றாக வேஇருந்தது. அதிலும் தென்மாகாண சபையில் அரசாங்கம் தோல்வியைத் தழுவியுள்ள நிலையில் மேலும் முதன்மை பெற்றதொன்றாக மாறியது

தென் மாகாணத்தில் டி பி விஜேதுங்காஇனப்பிரச்சினைக்குகடைப்பிடித்த கொள்கைக்கு கிடைத்ததோல்வியானது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படுதல் வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை அரசாங்கத்திற்கு அதிகரித்தது

இந்நிலையில் சபாநாயகர் சமாதான திர்வுத் திட்டம் இன்றி, ஆயினும் வடக்கே மேற்கொள்ளும் விஜயமானது அரசாங்கத்தை நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் தானும் சமாதானப் பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வந்துவிடக்கூடும் இதுஇனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு என்ற பேச்சிற்கே இடமில்லை என்ற டி பி விஜேதுங்காவின் நிலைப்பாட்டில் அழுத்தத்தை பிரயோகிக்கும் ஒன்றாக மாறிவிடவும் கூடும்;

இந் நிலையிலேயே சபாநாயகர் முகமத்தின் பயணத்தை ஆரம்பத்திலேயே இரத்துச்செய்துவிட அரசாங்கம் தீர்மானித்தது-சபாநாயகர் முகமத்தின் பயணம் இரத்துச்செய்யப்பட்டமைக்கு கூறப்பட்ட காரணம் தெளிவில்லை- இதனை சபாநாயகர் முகமத் பி.பி ஸிக்கு வழங்கிய பேட்டியில் அவரே தெரிவித்துள்ளார்- எனது,,யாழ். விஜயத்தை ஜனாதிபதி ஒத்திபோடுமாறு ஏன் கூறினார்என்பது எனக்குத் தெரியாது- யாழ்ப்பாணம் செல்ல முடியாததையிட்டு எனக்கு மிகவும் கவலை- நாட்டில் சமாதானம் இப்பொழுது தேவை பிரச்சினையைத் தீர்ப்பதுஇப்பொழுது அனைவரினதும் கடமை அரசாங்கம் இதை உணர வேண்டும்'' எனச் சபாநாயகர் குறிப்பிட்டார்


**ஜெயராஜ்**

சபாநாயகரின் கூற்றின் அடிப்படையில் பார்க்கும்போதும், அரசாங்கத்தின் முன்னுக்குப்பின் முரணான நடவடிக்கையைப் பார்கும்போதும் அரசாங்கம் குழப்பமாகவுள்ளன்தென்பதைஏற்கவே தோன்றும் ஆனால்அவ்வாறான விமர்சனம்தப்பானதாகும். எவ்வாறெனில் அரசாங்கம் இராணுவத்தீர்வு என்ற தனது நோக்கத்திற்கு ஏற்பவே காய்களை நகர்த்த முற்படுகின்றதுஎன்பதேஉண்மைநிலையாகும் சுருக்கமாகக் கூறுவதானால் தென்னிலங்கையில் சமாதானத்தின் குரல் ஒலிக்கத் தொடங்கியிருக்கும் வேளையில் அரசு சமாதானத்தின் கைதியாகி விடக்கூடாது என்ற அரசாங்கத்தின் நோக்கமே முகமதின் விஜயத்தை டி.பி விஜேதுங்கா நிறுத்தியதற்கான காரணமாகும்,

ஆனால் டி பி. விஜேதுங்காவின் முடிவானது இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்கு அவர் போட்டுள்ள முட்டுக்கட்டையாகும். அவரின் திட்டத்தின் பிரகாரம் இன்று அரசியல் இராணுவ ரீதியில் பலவீனப்பட்டுப் போயுள்ள ஐ தே கட்சி அரசாங்கம் வடக்கில் பெறப்படும் இராணுவ வெற்றிகள் மூலம் தமது அரசியல், இராணுவ பலத்தை விஸ்தரித்துக் கொள்வதாகும்,

ஆனால். அவரின் இக்குறிக்கோள் எத்துணை சாத்தியமானது என்பது ஒருபுறம் இருக்க இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வையும், இனங்களிடையே ஒருசமாதானத்தையும் ஒரு போதும்அவரால் ஏற்படுத்த முடியாது என்பதைத் துணிந்து கூறலாம். ஏனெனில் வடக்கில் மேற்கொள்ளும் பாரிய இராணுவ நடவடிக்கைகளும் மக்களின் உயிர், பொருள், உடைமைகள் அழிவுகளும் சமாதானத்திற்கான வழியை அடைத்துவிடும் என்பதை விடுதலைப்புலிகள் ஏற்கனவே தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார்;

## 2-ம் ஆண்டு இதய அஞ்சலி



### செல்வி துஷாந்தி பஞ்சாட்சரலிங்கம்

(49, கச்சேரி நல்லூர் வீதி, மூத்தவிநாயகர் கோவிலடி நல்லூர்)

அன்னையின் மடியின் 17-09-1981

ஆண்டவன் திருவடியில் 01-04-1992


கண்ணின் மணிபோல் எம்மைக் கலங்க வைத்துச் சென்றாயே!
மண்ணில் வாழ்க்கை தன்னை மறியாது நடந்தாயோ!
எண்ணமெல்லாம் நின்னையே நினைந்துருவொட்டுதே
கண்ணின் மணியே துஷாந்தி! உன்கலை நிறைந்த
திருமுகத்தை காணாது கலங்குகின்றோம்
நடனக் கலையின்று நல்லரங்கேற்றங்கண்டாய்
திடமுடனே கலைஞரையும் சிறப்பாகத் திகைக்க வைத்தாய்
படமுடியாத் துயரத்தில் எம்மைப் பகலிரவாய்த் தவிக்க வைத்தாய்
நடராச மூர்த்திதான் உன்னை நற்பணிக்கே சேர்த்தாரோ

ஓம் சாந்தி

அப்பா, அம்மா, அக்கா, தம்பிமார், மற்றும் உற்றார், உறவினர்.

ஆ. பஞ்சாட்சரலிங்கம்,
கமலேஸ்வரி களஞ்சியம்,
271/118, K.K.S வீதி, யாழ்ப்பாணம். (7902)

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 3 7.1962

தமிழீழ மண்ணில் 1.4.1987

### லெப்டினனட் மயூரன்

[இராசரத்தினம் செல்வகுமார் (பபி)]

திதி: 14 - 4 . 94

அன்பின் செல்வமே பபி
நீ எங்கள் குடும்பத்தில் அணையாத தீபமடா
தாய் நாட்டைக் காக்கவென்று தலைவன்
சொல் தவறாது பயிற்சிகள் பல பயின்று
தலைவரின் மெய்ப் பாதுகாவலனாய்
கடமைகள் பல புரிந்திட்டாய்
எதிரி படையோடு போராடும் வேளையிலே
சினைப்பர் தனையேந்தி சாதனைகள் செய்தாயடா
சினைப்பர் மயூரன் என்னும் பெயரையும்
பெற்று நீ ஓடி பறந்து விட்டாய்
ஆண்டு ஏழு ஆகிவிட்டதடா
உன் நினைவு மறக்கமுடியாதடா
மறக்க முடியாதடா

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
அப்பா, அம்மா, அண்ணாமார்
அண்ணிமார், தங்கைமார், மைத்துனர்கள்
பெறாமக்கள், மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள். (சி-8935)

மயூரன் வீதி,
மலாகம்.

## குழந்தைகள்

இடமுண்டு: இது குழந்தைகளின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கலாம். தொப்புள் கொடி வெட்டிய இடத்தில் அசுத்தமான வேறு ஏன்ன பட்டாலும் இது நேரக்கூடும்.

தடுப்பு மருந்து பெற்றிராத தாயின் உடலில் ஏற்புவலிவிஷக்கிருமி உட்புகுவதால் அவருக்கும் உயிராபத்து ஏற்பட இடமுண்டு. தாய்மாரும் அவர்கள் இந்தப் பயங்கர நோயில் இருந்து பாதுகாப்புப் பெற இடமுண்டு தாங்கள் கர்ப்பிணியாக இருக்கும் போது உரிய காலத்தில் ஏற்புவலிக்கெதிரான தடைமருந்தை (டெட்டனஸ்டொக்சைட்) தவறாது பெற்றுக்கொள்வதன் மூலம் இப்பாதுகாப்பை அவர்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம். கர்ப்பிணித் தாய்மார் தாங்கள் கருவுற்ற 12 வாரங்கள் கழிந்த பின்னர் ஏற்புவலிக்கெதிரான முதலாவது தடுப்பூசிமருந்தைப்பெற்றுக்கொள்ள வேண்டும். இதைப் பெற்று 4 -- 6 வாரங்கள் கழிந்த பின்னர் இரண்டாவது முறைபெற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு முறை கருவுற்று உரிய காலத்தில் ஏற்புவலித் தடுப்பு மருந்து பெற்றுக்கொண்ட ஒரு தாய் இரண்டாவது தடவை மருந்து ஏற்றிய திகதியிலிருந்து அடுத்த 3 வருட காலத்துள் மீண்டும் கருவுற்றால், இந்த ஏற்புவலி தடுப்பு மருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அது போன்று இரண்டாவது தடவை தடுப்பு மருந்து பெற்ற நாளில் இருந்து 5 வருட காலத்துள் மீண்டும் கருவுற்றால் அவர் மீண்டும் ஒரு தடவை மருந்து ஏற்றிக் கொண்டால் போதுமானது. 5 வருடம் கழித்துக்கர்ப்பிணியாகும் பட்சத்தில் அவர் இரண்டு தடவையும் மருந்தேற்றிக்கொள்ள வேண்டும்.

(தகவல்: உயிர்காக்கும் உண்மைகள் என்ற நூலிலிருந்து யுனிசெவ், சுகாதாரக் கல்விப்பணியகம் என்பனவற்றின் வெளியீடு)

## காணவில்லை



முருகேசு கார்த்திகேசு வயது 60, உயரம் 5' 6'' பொது நிறம், அளவான உடலமைப்பு கொண்டவர் இவர் கடைசியாக பச்சைக் கோடன் கிப்ஸ் சாரமும், வெள்ளை நிற சேட்டும் அணிந்திருந்தார். இவர் பற்றிய தகவல் தெரிந்தோர் தயவு செய்து எம்மிடம் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி,

க. பாஸ்கரன்
43, 1ஆம் குறுக்கு வீதி,
மணிப்புரி, கொழும்புத்துறை.

(சி-8978)

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஈழமண்ணில் 10 - 12 - 1963

ஈழவர் இதயங்களில் 21 - 3 - 1987

### வீரவேங்கை சாந்தன்

[இராசநாயகம் சாந்தகுமார்]

(அல்வாய் வடக்கு)

ஆண்டுகள் ஏழல்ல பல்லாண்டு போனாலும்
நீங்காது உன் நினைவலைகள் எங்கள் நெஞ்சங்களிலிருந்து
உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை
பிரார்த்தித்து நிற்கும்

யோகு மாமா, மாமி

| மைத்துனர்கள் | மைத்துனிகள் |
|---|---|
| யோ. கலையரசு | யோ. யசோதா |
| யோ. செந்தூரன் | யோ. கார்த்திகா |

தம்பசிட்டி. (சி-8975)


கண்கவரும் "றோஜா" பூக்கள் எழிலூட்டும் நேரசூசி றோயல் இன்டஸ்றீஸ் றோயல் பேக்கிங் பவுடருக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது




மலரும் புத்தாண்டுக்கான
அரிய பொக்கிஷமாக
பெறுமதிமிக்க பரிசாக
"நேர சூசி" வழங்கப்படுகின்றது

சுவையான கேக் தயாரிப்பதற்கு
மனையியல் ஆசிரியைகளால்
இன்றைய சிபார்சு

**றோயல் பேக்கிங் பவுடர்**

றோயல் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்தாரின்
"றோயல் கானமழை" நிகழ்ச்சி இலங்கை வானொலியில் சேவை ஒன்றில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 3.45 முதல் 4.00 மணிவரை ஒலிபரப்பாகி வருகின்றது உங்கள் தேர்வுகளும் ஒலிபரப்பாக விரும்பினால் இச்சேவையைக் கேட்டு மகிழுங்கள்: ரொக்கப்பரிசு 1000 மட்டுமே.

சில்லறை வியாபாரிகள் தமது நேரசூசிகளை மொத்த வியாபாரிகளிடம் கேட்டு வாங்குங்கள்

**றோயல் இன்டஸ்றீஸ்,** (7903)

பொன்னையா லேன், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

# காஷ்மீர்விடயத்தில் ஆதரவளிக்குமாறு முஸ்லிம்நாடுகளிடம் பாக். கோரிக்கை

(டில்லி)

காஷ்மீர் பிரச்சினையில் தனது நாட்டுக்கு ஆதரவளிக்கும்படி முன்னைய சோவியத் குடியரசுகளான முஸ்லிம் நாடுகளுக்கு பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்லாமாபாத்திற்கு விஜயம் செய்துள்ள கசிகிஸ்தான் தலைவர் ஸ்மாயில்ரகுமானுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ள அவர் காஷ்மீர் மக்களின் சுயாட்சி கோரிக்கைகளுக்கு இணங்கும்படி மத்திய ஆசிய நாடுகள் இந்தியாவை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுள்ளார்.

ஜம்மு காஷ்மீர் தொடர்பான பிரச்சினைகளுக்கு இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த பாகிஸ்தான் ஆயத்தமாக இருக்கிறது. காஷ்மீர் மக்களின் உரிமைகளை இந்தியா நசுக்கக் கூடாது. மக்களின் கருத்திற்கு இந்தியா மதிப்பளிக்க வேண்டுமென்று பெனாசிர் பூட்டோ கேட்டுள்ளார்.

காஷ்மீர் பிரதேசம் முழுவதும் இந்தியாவிற்கு சொந்தமானதென புதுடில்லிஅரசாங்கம் கூறிவருகின்றது. ஆனால் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் காஷ்மீர் பிரதேசத்தின்எதிர்காலம் ஐக்கிய நாடுகளின் ஆதரவில் நடத்தப்படும் பொதுசன வாக்கெடுப்பு மூலம் நடத்தப்படவேண்டுமென பாகிஸ்தான் விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பாக். உளவுப்படை காஷ்மீரை குழப்புகிறது

### இந்திய அமைச்சர் குற்றச்சாட்டு

(சென்னை)

ஜம்முகாஷ்மீரில் பல பகுதிகளில் இடையூறுகளை ஏற்படுத்தும் முயற்சிகளில் பாகிஸ்தானின் முப்படை உளவு அமைப்பு ஐ. எஸ் ஐ மேற்கொண்டு வந்த போதிலும் கூட அந்த மாநிலத்தில் இயல்பு நிலை மீண்டும் ஏற்படுத்த உறுதிபூண்டுள்ளதாக இந்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ்பைலட் கூறியுள்ளார்.

புதுடில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய பைலட் தீவிரவாதம் சம்பந்தமான சம்பவங்கள் ஜனநாயக ரீதியிலான அரசாங்கம் ஒன்றை மீண்டும் அமைப்பதென்ற உறுதியான எமது முடிவை மேலும் வலுப்படுத்தியுள்ளன என்றார்.

நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் சீர்குலைப்பதற்காக இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே மதப்பிரிவினையை ஏற்படுத்த பாகிஸ்தான் முப்படை உளவுஸ்தாபனம் செய்யும் முயற்சிகள் முறியடிக்கப்படுமென்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

விமானப்பயணி மரணம்

## 75,000 டொலர் நஷ்டஈடு ஏயர் லங்காவிடம் கோரல்

(கொழும்பு)

ஏயர் லங்கா லிமிட்டெட்டின் அசட்டை காரணமாகப் பயணி ஒருவர் மரணமடைந்தது குறித்து 75,000 அமெரிக்க டொலர் இழப்பீட்டுத் தொகை கோரி வழக்கொன்று தாக்கலாகியுள்ளது, இந்த வழக்கு வரும் ஜூலை 13ஆம் திகதி கொழும்பு மாவட்ட மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

ஜி. முத்துராமலிங்கம் ஜனவரி 16, 1989 அன்று மாலை 6 மணி ஏயர் லங்கா சேவையில் சென்னை செல்ல இருந்தார்; கட்டுநாயக்கா விமான நிலையத்தில், ஏயர் லங்கா பஸ்ஸில், விமானத்தில் ஏறுவதற்காகச் சென்றார். அப்போது அவர் பஸ்ஸில் இருந்து விழுந்து தலையில் காயப்பட்டு இறந்தார்.

முத்துராமலிங்கத்தின் மரணம் ஏயர் லங்காவின் அசட்டையினால் சம்பவித்ததாக இறந்தவரின் மகன் எம். ராமசுப்பு இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

இறிலங்காப் பணம் தவிர்ந்த அன்னிய நாட்டுப் பணத்தை இழப்பீட்டுத் தொகையாக வழங்கத் தீர்ப்பளிக்க நீதி மன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்று ஏயர் லங்கா தரப்பில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார

DAB சனநாயகக் கூட்டணியின் முதுகெலும்பினை முறிக்க முடியும் என்று கருதுகின்றது.

எனவே பேசுவது மனித உரிமை ஆனால் ஆதரிப்பது அடக்கு முறை அரசுகளைஎன்றிருக்கும் நிலையில் தார்மீகத்தைவிட தன் நலமே முக்கியம் என்கிற புதிய ஒழுங்கில் சூகி அம்மையார் என்றாவது மியான்மாரின் சனநாயகத்தை உலக ஆதரவை மட்டுமே நம்பி மலரச்செய்ய முடியுமா என்பது இப்போது சந்தேகமாகிவிட்டது என்றாலும் 1991-ம் ஆண்டு அமைதிக்காக நோபல் பரிசு பெற்ற அவரது மியான்மாரில் அமைதியை கொண்டுவர முயலும் மன உறுதி நிறைந்தபோராட்டம் என்றும் மனித உலகின் மனச்சான்றினை உறுத்திக் கொண்டே இருக்கப்போகின்றது.

## கலந்துரையாடல்

புலிகளின் குரல் வானொலிக் கலைஞர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் வழமைபோல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூரில் நடைபெறும் அனைத்துவானொலிக் கலைஞர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி புலிகளின் குரல் பொறுப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மக்கள வங்கி ஆட்சேர்ப்பு

## போட்டிப் பரீட்சை நிலையம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் வங்கி கிளைகளுக்கு தமிழ்-ஆங்கில சுருக்கெழுத்தாளர்களை சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை நிலையங்களில் ஒன்று மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரி பரீட்சை மண்டபங்கள் யாவும் யாழ் திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி வேம்படி மகளிர்கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த முதலாம், இரண்டாம், மூன்றாம் பரீட்சை மண்டபங்கள் திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையில் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் மண்டபங்களில் அமையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் மாறிக்கிடைக்கப் பெற்றால் சுருக்கெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு எழுதுவினைஞர்க்கான அனுமதி அட்டையும் எழுதுவினைஞர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு சுருக்கெழுத்தாளர் அனுமதி அட்டையும் கிடைக்கப் பெற்றிருப்பின் மக்கள் வங்கியின் அதிகாரத்தைப் பெற்று வந்து யாழ் கல்வித்திணைக்களத்தில் உரிய அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ் வலயம் 1 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## தொழில் நுட்ப ஆட்சேர்ப்பு பரீட்சை

நடுத்தரத் தொழில்நுட்ப சேவைத்தரம் மூன்றிற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை நாளை 2ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கடந்த செவ்வாய் யாழ் கல்வித்திணைக்களம் வந்துசேர்ந்துள்ளது. இவற்றை இன்று யாழ். கல்வித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பரீட்சார்த்திகள் அறிவுறுத்தப்படுகின்றனர்,

மேலும் இப் பரீட்சை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டிருப்பினும் யாழ். இந்துக் கல்லூரியிலேயே நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# ஜனநாயகம் உருவாகும்வரை சட்டசபை செல்லப்போவதில்லை

### - தமிழக எதிர்க்கட்சித் தலைவர் பாலசுப்பிரமணியம்

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையில்சுதந்திரமாகஅச்சமின்றி ஜனநாயக முறையில் செயல்படும் சூழ்நிலை உருவாகும் வரை சட்டப்பேரவை நடவடிக்கைகளில் இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பங்கேற்கப்போவதில்லை என்று சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் சட்டப் பேரவையில் கடமையை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டதால் ஆளுநர் சென்னாரெட்டியை தமது தலைமையிலான சட்டமன்ற உறுப்பினர்கள் குழு சந்தித்து இதை எடுத்துரைத்ததாகவும் அவர் கூறினார்.

சட்டப் பேரவையில் ஜனநாயக முறையில் இந்திரா காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் தமது கடமைகளை நிறைவேற்ற தேவையான சூழ்நிலை உருவாக்க உதவுமாறு ஆளுநரை வேண்டிக் கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்

## விலங்குவேளாண்மை பயிற்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விலங்கு வேளாண்மைப் பகுதியினர் விலங்கு வேளாண்மை பற்றிய அறிவை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் திருநெல்வேலியிலுள்ள விவசாய திணைக்களத்துடன் இணைந்து பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். தெரிவு செய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்குவிலங்கு வேளாண்மை பற்றிப் போதிக்கப்பட்டுவருவதுடன் செயன்முறைப் பயிற்சியும் வழங்கப்பட்டுவருகிறது பயிற்சியாளர்களுக்கு தடுப்பூசிபோடுதல், செயற்கை முறைச் சினைப்படுத்தல், போன்ற பயிற்சிகளும் கால்நடைத் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப் பட்டுவருகிறது.

## சமூகம் தரவும்

(வேலணை)

யாழ் மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் இருந்து ஆயுர்வேத வைத்தியராக பதிவு செய்வதற்கு விண்ணப்பித்தசகலரும்இன்று காலை 9 மணிக்கு யாழ் ஸ்ரான்லி வீதியில் உள்ள லங்கா சித்த ஆயுர் வேத மருத்துவக் கல்லூரிக்கு கேட்கப்பட்ட சகல ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு வடக்கு கிழக்கு மாகாண அரசின் சுகாதார மகளிர் விவகார அமைச்சின் ஆயுர்வேத பணிப்பாளர் வைத்திய கலாநிதி உ. ரோ மகேஸ்வரன் கேட்டுள்ளார். (14)

## சத்தியப்பிரமாணம்

மாகாண ஆளுநரிடம் விசாரித்த போது "தேர்தலில் போட்டியிடும் பொழுதே உறுப்பினர்கள் விசுவாசம் தெரிவித்து சத்தியப் பிரமாணம் செய்திருப்பதால்மேலும் சத்தியப் பிரமாணம் எடுக்க வேண்டியதில்லை" எனத் தெரிவித்திருக்கிறார்.

இலவச நிவாரணத்திற்கு

## முத்திரைகள் இன்றி உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தவர்களுக்கான இம் மாதத்திற்குரிய இலவச நிவாரணத்திற்கு முத்திரைகள் இன்றி உலர் உணவுப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென தெரியவருகின்றது

இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட இலவச உலர் உணவு முத்திரைகள் சென்ற மாதத்துடன் முடிவடைந்துள்ளது. அத்துடன் அவைக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுவிட்டன;

எனவே பங்குனி மாதத்திற்கான உலர் உணவு முத்திரைகள் இன்னமும் யாழ். செயலகம் வந்து சேரவில்லை. இதனைத் தொடர்ந்தே முன்பு வழங்கப்பட்ட முத்திரையின் அடிக்கட்டையைச் சமர்ப்பித்து நிவாரணப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் நடைபெறுவதாக தெரியவருகின்றது; (பா, தி)

## கூட்டுறவுச் சங்கத்தில் மண்ணெய் பதுக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படாது மண்ணெண்ணெய் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட சங்கம் ஒன்றில் பொதுமக்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு நாலு லீற்றர் வீதம் விநியோகிக்கும்படி வழங்கப்பட்ட மண்ணெண்ணெயில் 14 பரல்கள் இவ்வாறு விநியோகிக்கப்படாது பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாக நம்பப்படுகிறது;

இது குறித்து யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் நடவடிக்கை எடுத்துவருவதுடன் இம் மண்ணெண்ணெய் விநியோகத்தை உடனடியாக நிறுத்தும்படியும் கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது;

## பல்கலை. ஊழியர்கள் பிரச்சினை தீர்க்கப்படும்

### அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் கல்விப் போதனையுடன் சம்பந்தப்படாத ஏனைய ஊழியர்கள்எதிர் நோக்கும்பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படுமென பல்கலைக்கழக அலுவல்கள் அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க உறுதி அளித்துள்ளார்;

யாதிக சேவக கமிட்டி சம்மேளனத்தைச் சேர்ந்த அனைத்து பல்கலைக்கழக தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் அமைச்சரைச் சந்தித்து தமது பிரச்சினைகள் பற்றி உரையாற்றினார்கள். சம்பளத்திட்டம் ஓய்வூதியம் என்பன உட்பட பல்வேறு பிரச்சினைகள் ஆராயப்பட்டன;

கல்விப்போதனையுடன் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக ஊழியர்களுக்கு 10 சத வீத சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்ட போதிலும் தமது சம்பளங்கள் அதிகரிக்கப்படவில்லையென்று அவர்கள் சுட்டிக்காட்டினர். இந்த விடயம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத்தில் நிச்சயமாக ஆராயப்படுமென அமைச்சர் உறுதியளித்தார். இந்தக் கூட்டம் இம் மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ளது

ஊழியர்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டம் பற்றி அமைச்சரவை அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும் படி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கேட்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# 60 வீத மக்களைக் கொண்ட மாகாணங்கள் எதிர்க் கட்சிகளிடம்

## தென் மாகாண முதல்வர் கூறுகிறார்

(கொழும்பு)

சிறிலங்காவில் எதிர்க்கட்சியின் ஆட்சியின் கீழ் மூன்று மாகாண சபைகள் இருப்பதுடன் நாட்டின் மொத்த சனத்தொகையில் 60 வீத மானவர்கள் இருப்பதாக் கணிசமான மக்களின் நம்பிக்கையை இப்போது பொது ஜன ஐக்கிய முன்னணி பெற்றுள்ளதைக் காட்டுவதாக அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் முதலமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டபின் அங்கு கூடிநின்ற ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்க வன்முறைகள் மற்றும் அரச பயங்கரவாதத்திற்கு அடிபணியாது துணிவுடன் வாக்களித்தமைக்காக நன்றி தெரிவிக்கிறேன். தென்பகுதியில் ஏற்படவுள்ள அரசியல் மாற்றத்திற்கு தென் மாகாண மக்கள் அடிகோலியிருப்பதுடன் அரசை இன்று ஆட்டங்காண வைத்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசினால் ஆயுதமாக பயன்படும் மனித உரிமைகள்

(டில்லி)

மனித உரிமையை சில நாடுகள் பொருளாதார-அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துகின்றன என்று மலேசியப் பிரதமமந்திரி மகாதிர் மொகமெட் கூறியிருக்கிறார்.

தங்களுடைய பொருள்களை விற்பதற்கு வளரும் நாடுகளை ஒரு சந்தையாகச் செல்வந்த நாடுகள் பயன்படுத்துகின்றன என்று புதுடில்லியில் அவர் செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

வளரும் நாடுகளும், மன்டல சார்பற்ற இயக்கமும் ஏனைய நாடுகளின் நெருக்குதலை தடுக்க முடியுமென்று அவர் கூறினார்.

## 'புலிகளின் குரல்' இன்றைய இரவு நிகழ்ச்சி

08-01ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''பூமி பிளந்தது புயல் எழுந்தது''

08-10ற்கு - கலைமஞ்சரி கலைமஞ்சரியில் முதலில் இறுவட்டு - 'புலப்படும் புதிய உலகம்'' கவிதை - ''கரும்புலி''

08-30ற்கு - செய்திகள்

08-40ற்கு - அரசியல் அரங்கம் ''நந்தவனத்திலோர் ஆண்டி பாகிஸ்ட்ட'' டிங்கிரி பண்டார - விஜேதுங்கா

08-50ற்கு - வாத்திய கானங்கள்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 31-03-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1502

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

26-0407, 27-8754, 40-2677, 41-9895, 26-4726, 43-3854, 27-8751, 27-8155, 26-3812, 27-1255, 26-2585, 26-5361, 42-0962, 26-4139, 24-5258, 27-6415, 26-0682, 28-9259, 41-9167.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

26-4896, 24-,4465 28-1380, 42-3927, 42-9345, 42-2397, 24-5396, 43-8263, 27-9033, 28-1085, 42-0526, 41-9989

## நகை கண்டெடுப்பு

வல்லை முனியப்பர் கோவிலடியில் கடந்த திங்கட்கிழமை நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## பரீட்சை

சில மாணவ கூட்டங்கள் நடைபெற இருப்பதாகவும் இக் கூட்டத்திலே மேற்படி பழிவாங்கல்கள் குறித்து மாணவர் எதிர்ப்பு தெரிவிக்கப்பட இருப்பதாக தெரிய வருகின்றது.

இதேவேளை இன்று பேராசிரியர் குணரெட்ணம் பதில் உபவேந்தராக பதவி ஏற்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

## 20 பொலிஸ்

பொலிஸார் மீது குற்றச்சாட்டுகள் கிடைக்கப்பட்டதை தொடர்ந்து இவ் விசாரணை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

## தென்மாகாண

சரவை அமைக்கப்படவுள்ளது. டக்கிளஸ் அழகப்பெருமான், வீரரட்ண வீரக்கோன் ஆகியோருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் சமசமாஜ கட்சி அல்லது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

## அமெரிக்க

க்கும் இவர் அமெரிக்காவிற்கும் தெற்காசிய நாடுகளுக்கும் இடையிலான வருங்கால உறவுகள் பற்றி ஆராய்வதற்காக இந்த பிராந்தியங்களுக்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு வருகிறார் என அரசு அறிவித்துள்ளது.

இவர் ஏற்கனவே இந்தியாவிற்கும் நேபாளத்திற்கும் பயணம் செய்திருந்தார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வரம

வருகிறது. இந்த நடவடிக்கை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு தொடர்பு கொண்டிருக்கிறது.

## சுதந்திரக்கட்சி

தேர்தல் வெற்றியின் பின் நாங்கள் இப்போதுள்ள ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க அரசாங்கத்தினால் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டித்து ஊர் ஊராக சென்று போராட்டம் கூட்டங்கள் நடத்துவோம். தென் மாகாணத் தேர்தல் பிரசாரத்தின் போது நிறைவேற்று ஜனாதிபதி முறையை நான் ஜனாதிபதியானால் ஒழித்து விடுவேன் என்று கூறினேன். ஜனாதிபதி முறை ஒழிந்து பிரதமர் ஆட்சிமுறை வருமானால் அந்தப் பிரதமர் யாராக இருக்க வேண்டும் என்பதை கட்சிதான் உரிய காலத்தில் தீர்மானிக்கும்.

பொது ஜன ஐக்கிய முன்னணி செயலாளரின் தலைமையிலான கமிட்டி ஒன்று இப்பொழுது எமது எதிர்காலத் திட்டங்களையிட்டு ஆராய்ந்து வருகிறது'' என்றார்.

## 31ஆம் நாள் நினைவலைகள்



உதயம்: 18 - 02 - 1992

அஸ்தமனம்: 02 - 03 - 1994

செல்வி

### குஜேந்தினி சந்திரா அவர்கள்

தேனே! அமிர்தமே! செல்வத் திரவியப் பூமானே! மனக்குதைக்கு மாமருந்தே ஊனுடலில் காட்சிதந்து பொய்மறைந்த கண்ணே குஜேந்தினி நீ மீட்சிதர வா அம்மா விரைந்து.

42, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

அப்பா, அம்மா குடும்பத்தினர்.

(7909)

சில அசதிகள் கருதி!

### அறிவுக்களஞ்சியம் - 22

28-4-94-ல்வரும் தயவு செய்து காத்திருங்கள்

(7904)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மரண அறிவித்தல்கள்

## காசிப்பிள்ளை சரஸ்வதி

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த முன்னாள் அப்பையா அன்கோ பங்காளரும், காசிப்பிள்ளை அன்கோ உரிமையாளரும் ஆன காசிப்பிள்ளையின் அன்பு மனைவியான காசிப்பிள்ளை சரஸ்வதி வியாழக்கிழமை 31-3-94 அதிகாலை காலமாகிவிட்டார். இவர் யாழ்ப்பாண ஸ்ரேசனடியைச் சேர்ந்தவர்களான காலஞ்சென்ற நடராசாவினதும், நவரத்தினம், தருமலிங்கம் கணக்காளர்- (லண்டன்) அன்புச் சகோதரியுமாவார். இராமக்கிருஷ்ணன் (ஜேர்மனி), இராமச்சந்திரன் (ஜேர்மனி), பாலக்கிருஷ்ணன் (கனடா), கிருஷ்ணவேணி, கிருஷ்ணலீலா, கிருஷ்ணராகினி, கிருஷ்ணகுமாரி (கனடா), கிருஷ்ணபதி ஆகியோரின் தாயாரும் சண்முகநாதன் (அதிபர் கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), அருணானந்தம் (யாழ் மாநகர சபை), ஈசன் (கனடா), வரதராஜன் (ஜேர்மனி), சோதிலிங்கம் (கனடா), நாகேஸ்வரி, ஜெனேஸ்வரி, சசிலாதேவி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். சண்முகவதனி, லதா, சாந்தன், ஞானக்குமரன், சாயிசமித்திரா, திவாகரன், தருசன், தர்சனி, ஸ்ரீ மதிபா, அர்ச்சனா, கிருஷ்ணானந்தன், சாந்தன், டயானா, கிறிஸ்ற், பிரகாஷ், பிருந்தா, பிரியா, பிரதீப், ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாருடைய இறுதிக் கிரியைகள் 31-03-94 அன்று வியாழக்கிழமை நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

'சிவாஸ் அஸ்கிரீம்,' கொக்குவில் மத்தி.

தகவல்: சண்முகநாதன்

(7910)

## அண்ணாமலை (கந்தையாபிள்ளை பூரணம்

காரைநகர் சந்தம் புளியடியைப் பிறப்பிடமாக கொண்டவரும் தற்போது இல. 17 பிரம்படி லேன் கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவரும் காலம் சென்ற முன்னாள் பொலநறுவை பிரபல வர்த்தகர் கந்தையாபிள்ளையின் அன்பு மனைவி பூரணம் 31-03-1994 அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் தில்லைநாதன் (கிளிநொச்சி), விசுவலிங்கம் (தேவராணி ஸ்ரோர்ஸ், கொச்சிக்கடை). செல்வரத்தினம் (செல்வம்ஸ், நெடுங்கேணி), உமாதேவி, துரைசிங்கம் (A K T நெடுங்கேணி), தேவராணி ஆகியோரின் தாயாரும், நவரத்தின பூபதி, செல்வராணி, பத்துமாதேவி, கந்தசாமி (M L T போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), நடராசா (காரைநகர் ப. நோ. கூ. சங்கம்), கங்காதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று (1-04-1994) காலை 9-00 மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 17, பிரம்படி லேன், கொக்குவில்.

தகவல்: செல்வரத்தினம் (மகன்)

(7907)

## கண்மணி சபாரெத்தினம்

புங்குடுதீவு 2ஆம் வட்டாரம் ஆஸ்பத்திரியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற (ஓடலி) சபாரெத்தினத்தின் அன்பு மனைவி கண்மணி காலமானார். இவர் காலஞ்சென்ற சந்திரதாசன், இரத்தினமணி, கிலேசன் (நேசன் கடை திருநெல்வேலி), பொன்மணி சந்திரபாலன் (புங்குடுதீவு மகாவித்தியாலயம்), தவபாலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நேசன் கடை, ஆடியபாதம் வீதி, கேணியடி திருநெல்வேலி.

தகவல்: ச. நேசன் (மகன்)

(7911)